தேவனின் சிறப்பு ஈவினை
நீங்கள் விரும்பினால்

டெரிக் பிரின்ஸ்

Originally published in English under the title
"IF YOU WANT GOD'S BEST"

Published by Derek Prince Ministries – India

Printed by Derek Prince Ministries

T110/TA/3000/0608/SR

ISBN 978-81-89250-76-8

"If You Want God's Best" (Tamil)
"Dhevanin Sirapu Evinai Neengal Virumbinal"

Published by permission in the Tamil language.
Translated into Tamil language by:
MR. G. SAMUEL KARUNAKARAN

For orders & other enquiries please contact :
DEREK PRINCE MINISTRIES - INDIA
18/32 Mangammal Salai, Renganagar
Trichy - 620 021, Tamil Nadu, S.India.
E-mail: r_m_c@vsnl.com
Phone : 00-91-431-2459464 / 2457181
Fax:00-91-2459564

DPM

Derek Prince Ministries

www.derekprince.org

பொருளடக்கம்

1. ஒரு நூறு மடங்கு கிறிஸ்தவன் 4
2. தேவனின் நிறைவான கொடை 10
3. தேவனின் சிறந்தவைகளை ஆசித்தல் 18
4. நாம் ஒருமுகப்படுத்த வேண்டியவர் இயேசு .. 24
5. தேவனின் வார்த்தையை தியானித்தல் 32
6. பரிசுத்த ஆவியானவரோடு நட்பு 40
7. செவி கொடுத்தலும் கீழ்ப்படிதலும் 46
8. செவி கொடுத்தலின் இரு சோதனைகள் 55
9. சரியான முன்னுரிமைகள் 63
10. தேவனை தேர்ந்தெடுக்க அனுமதித்தல் 70

ஆசிரியரைப்பற்றி. 77

1

ஒரு நூறு மடங்கு கிறிஸ்தவன்

இந்தப் புத்தகத்தின் தலைப்பு: "தேவனின் மிகச் சிறந்த காரியங்களை நீங்கள் விரும்புவீர்களானால்" ஒரு முற்றுப்பெறாத வாக்கியமாக அமைந்துள்ளது. இந்த வாக்கியத்தில் அமைந்துள்ள "ஆல்" (if) என்ற வேற்றுமை உருபு உங்களை தேர்வு நிலைக்குள்ளாக்குகிறது. தேவனுடைய மிகச்சிறந்த காரியங்கள் உங்களுக்கு தேவையா அல்லது தேவையில்லையா? இந்த வாக்கியத்தின் முற்றுப்பெறாத இரண்டாம் பகுதியானது நீங்கள் தேவனிடம் சிறந்ததைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என தீர்மானித்தால், நீங்கள் செய்யவேண்டிய எட்டுக் காரியங்களைப்பற்றி உங்களோடு நான் பகிர்ந்து கொள்ள எனக்கு வாய்ப்பளிக்கிறது.

வெற்றியின் இந்த எட்டுக் காரியங்களைக் குறித்து நான் உங்களோடு பகிர்ந்து கொள்வதற்கு முன்பாக நூறு மடங்கு கிறிஸ்தவராக நீங்கள் எவ்வாறு இருக்க முடியும் என்பது குறித்து நான் உங்களுக்குக் கூற விரும்புகிறேன்.

தேவனோடு உள்ள நமது உறவு, ஒருபோதும் ஒருதலைப் பட்சமானதோ அல்லது ஒரு வழிப்பாதையோ அல்ல. எப்பொழுதும் அதற்கு இரு பக்கங்கள் உள்ளன. இரு வழிகொண்டதாகவும் இருக்கும். ஒரு புறத்தில் தேவன் நமக்கு வைத்திருக்கும் காரியங்கள் உள்ளன. மறுபுறத்தில் அவற்றைப் பெற்றுக்கொள்ள நாம் எப்படி

செயல்படுகிறோம் என்பது அமைந்துள்ளது. தேவன் நமக்கு வைத்திருக்கும் காரியங்களும் அதனைப் பெற்றுக் கொள்ள நாம் செயல்படும் விதமும் நாம் எவ்விதமான வாழ்க்கை வாழ்கிறோம் என்பதைத் தீர்மானிக்கிறதாக உள்ளது.

*விதைக்கிறவனைப் பற்றிய உவமையில் இது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது (மத்தேயு **13:3-9, 18-23**) இந்த உவமையானது விதைக்கிறவன் ஒருவன் நிலத்தில் விதை விதைக்கச் சென்றது குறித்துக் கூறப்பட்டதாகும். இந்த விதைகள் நான்குவிதமான நிலத்தில் விழுந்தன. முதலாவது, சில விதைகள் வழியருகே விழுந்தன. அந்த நிலம் கடினமாக இருந்ததாலும் வழியிலே நடந்து சென்றவர்களின் காலடிகள் பட்டபடியினாலும் அவ்விதைகள் நிலத்தினுள் செல்லவே இல்லை. எனவே ஆகாயத்துப் பறவைகள் வந்து அவற்றை தின்றுவிட்டன. அதனால் அந்த விதைகள் எந்த பலனையும் கொடுக்கவில்லை.*

இரண்டாவதாக, சில விதைகள் கற்பாறையான நிலத்தில் விழுந்தன. அவைகள் முளைத்து வேர்கள் கற்பாறையைத் தொடும்வரை வளர்ந்தன. ஆனால் வேர்கள் அதற்குமேல் வளரமுடியவில்லை. சூரிய வெப்பம் தாக்கியவுடனே அவைகள் காய்ந்து போயின. இந்த விதைகளும் எந்தப் பலனையும் தரவில்லை.

மூன்றாவதாக, சில விதைகள் முட்கள் உள்ள நிலத்தில் விழுந்தன. விதைகள் முளைத்துச் செடிகள் வளர்ந்தன. முட்செடிகளும் கூடவே வளர்ந்து அவற்றை நெருக்கிப்போட்டன. இந்தச் செடிகளுக்கு காற்றோ நல்ல ஊட்டச் சத்தோ கிடைக்காததால் எந்தப் பலனையும் தரவில்லை.

நான் இந்த முதல் மூன்று வகையான நிலத்தைப் பற்றிக் கூற விரும்புகிறேன். இந்த உவமையின் முக்கியமான

பகுதியைப்பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன்: நல்ல நிலத்தில் இயேசு கிரியை செய்ய ஆசிக்கிறார். இதை வாசிக்கும் நண்பரே உங்கள் இருதயம் நல்ல நிலமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். நல்ல நிலத்தில் விழுந்த விதைகளைப் பற்றி இயேசு இவ்வாறு கூறுகிறார்:

> ***[23]நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருவான் என்றார். (மத்தேயு 13:23)***

பயிரிடுகிறவன் இரண்டு முக்கியக் காரியங்களைச் செய்வதைக் கவனியுங்கள். முதலாவது அவன் வார்த்தையைக் கவனிக்கிறான். இரண்டாவது அதைப் புரிந்து கொள்ளுகிறான். நல்ல நிலத்தைப் போல் இருப்பவர்கள் ஒவ்வொருவர் விஷயத்திலும் இது உண்மையாக உள்ளது. இருப்பினும் நல்ல நிலத்தைப் போலுள்ளவர்கள் எல்லாரும் நல்ல பயிரை விளைவித்தாலும் அவர்கள் கொடுக்கும் பலனில் வித்தியாசம் உள்ளது: சிலர் நூறு மடங்கும், சிலர் அறுபது மடங்கும், சிலர் முப்பது மடங்கும் விதைத்ததில் பலனைத் தருகிறார்கள். வேறுவகையாகக் கூறினால் விதைக்கப்பட்ட ஒவ்வொரு விதையிலும் சிலர் நூறு விதைகளும் சிலர் அறுபது விதைகளும் சிலர் முப்பது விதைகளும் உற்பத்தி செய்கின்றனர்.

இதில் மிகவும் விசேஷித்த காரியம் என்னவென்றால் நூறு மடங்கு பலனானது, அறுபது மற்றும் முப்பது மடங்கு ஆகிய இரண்டு பலன்களின் கூட்டுத் தொகையைவிட அதிகமாகும். குறைந்த உற்பத்தி செய்யும் மக்களைவிட முழுஉற்பத்தி செய்யும் மக்கள் அதிக உற்பத்தி செய்யும் திறன் படைத்தவர்களாவர். இந்தக் காரியத்தை வேதாகமத்தில் எல்லாப் பகுதிகளிலும் நாம் காணலாம்.

தேவனிடத்திலிருந்து மிகச் சிறந்ததைப்

பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் நூறு மடங்கு பலனைக் கொடுப்பவர்களாயிருப்பார்கள். அதைக் குறித்து நான் சிறப்பாகக் கூற விரும்புகிறேன். இதே உவமை லூக்கா சுவிசேஷத்தில் கூறப்பட்டுள்ளது. அதில் நல்ல நிலத்தைப்பற்றி இயேசு இவ்வாறு கூறுகிறார்.

> ***[15]நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள். (லூக்கா 8:15)***

இந்தப் பகுதியிலே இரு முக்கிய காரியங்கள் உள்ளன. அவைகள் இரண்டும் தேவனுடைய சிறந்ததை விரும்பும் கருத்தை உடையனவாக உள்ளன. முதலாவது, உண்மையும் நன்மையுமான இருதயம் என்று கூறப்பட்டுள்ளது. ஒரு திருப்புதலில் "உண்மையும்" என்பதற்கு "நேர்மையான" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எனவே முதலாவது தேவையான காரியம் "நேர்மை". நேர்மை என்பது வெளிப்படையான காரியம் மற்றும் உண்மை இரண்டையும் உள்ளடக்கியது. நேர்மை என்பது எதனையும் மூடி மறைப்பதோ இரட்டை நிலை உடையதோ அல்ல. இது தான் முதல் தேவை.

இரண்டாவதாக இத்தகைய நேர்மையான மக்களிடம் மூன்று வகையான எதிர்பார்ப்புகள் உள்ளன: அவர்கள் வசனத்தைக் கேட்கிறார்கள். அதை இருதயத்தில் காத்துக் கொள்ளுகிறார்கள். பொறுமையுடனே பலன் கொடுக்கிறார்கள். இந்த மூன்று வகையான செயல்களும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். தேவனுடைய சிறந்தவைகளைப் பெற்றுக்கொள்ள இம்மூன்றும் மிகவும் தேவை என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். தேவனுடைய சிறந்தவைகளைப் பெற்றுக்கொள்ள பொறுமை மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

இந்த உவமையில் கூறப்பட்டுள்ள கருத்து நம்

ஒவ்வொருவரும் ஒரு தனிப்பட்ட தீர்மானம் செய்ய நம்மை ஏவுகிறது. விசுவாச வாழ்க்கையில் நாம் எடுக்கும் தீர்மானங்களைக் குறித்து அதிகமாக நான் உங்களை வலியுறுத்த விரும்பவில்லை. நமது வாழ்க்கையானது நமது உணர்ச்சிகளினடிப்படையிலல்ல ஆனால் நாம் எடுக்கும் தீர்மானங்களினடிப்படையிலேயே அமைந்துள்ளது என்பதை அநேக மக்கள் உணர்ந்து கொள்வதில்லை.

நம்மை எதிர்நோக்கும் தீர்மானங்கள்: நான் எந்த அளவுக்குப் பலனைத்தர விரும்புகிறேன்? முப்பது மடங்கோடு திருப்தி அடைந்து விடுவேனா? அறுபது மடங்கு பலனைத்தர விரும்புகிறேனா? அல்லது தேவனுடைய சிறந்ததைப் பெற வாஞ்சித்து நூறு மடங்கு பலனைத்தர விரும்புகிறேனா? நீங்கள் தீர்மானம் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறீர்கள். இந்தப் புஸ்தகத்தைப் படிக்கையில் உங்களுக்கு முன்பாக வைக்கப்படும் முக்கியத் தீர்மானம்: நான் தேவனுடைய மிகச் சிறந்ததை விரும்புகிறேனா? நான் நூறுமடங்கு பலன்தர வேண்டுமென்பது எனது குறிக்கோளாக செயல்படுகிறேனா அல்லது அறுபது அல்லது நூறு மடங்கு பலனுடன் திருப்தியடைகிறேனா?

நீங்கள் என்ன பெற்றுக்கொள்ளப்போகிறீர்கள் என்பது உங்களுடைய இருதயத்தின் செயல்பாட்டைப் பொருத்தே அமையும். தேவனோடு உள்ள நமது உறவு இருபக்கங்களைக் கொண்டது என்று ஏற்கெனவே நான் கூறியுள்ளேன். ஒரு பக்கம் தேவன் நமக்காக வைத்துள்ள காரியங்களும் மறுபக்கம் தேவன் நமக்காக வைத்துள்ள காரியங்களுக்கான நமது செயல்பாடும் அமைந்துள்ளன. உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் எடுக்கும் தீர்மானமே நீங்கள் எவ்வாறு செயல்படப்போகிறீர்கள் என்பதைக் காட்டும்.

*லூக்கா **8:15**ல் வெற்றிகரமான செயல்பாட்டுக்கு மூன்று*

காரியங்கள் உள்ளதாக நாம் பார்த்தோம். முதலாவது தேவனுடைய வார்த்தையைக் கேட்க வேண்டும், இரண்டாவது அதை இருதயத்தில் காத்துக் கொள்ள வேண்டும். மூன்றாவது நீங்கள் செய்யும் காரியத்தில் பொறுமையோடே இருக்க வேண்டும்.

ஆம், நேர்மையான இருதயத்தின் செயல்பாடு நல்ல பலனைக் கொடுக்கும். நீங்கள் நல்ல கனி கொடுக்க வேண்டுமென்பதே தேவனுடைய வாஞ்சை என்பதை நீங்கள் திட்டமாக அறிந்து கொள்ள வேண்டும். இதைக் குறித்து அடுத்த அத்தியாயத்தில் விவரமாகக் கூறுகிறேன்.

2
தேவனுடைய நிறைவான கொடை

வெற்றிக்கு அடிப்படையான எட்டுவிதமான குறிப்புகளைக் குறித்துக் கூறுவதற்கு முன்பாக பலுகிப் பெருகுவதற்கும், கனிகொடுப்பதற்கும் உதவும் இரு முக்கிய ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இந்த இரண்டு காரியங்களையும் நீங்கள் புரிந்துகொள்வீர்களென்றால் முழுமையாக நீங்கள் பலன் கொடுக்க இவைகள் உங்களுக்குத் தேவையான விசுவாசத்தை உருவாக்கும் என்று நான் நம்புகிறேன்.

நாம் கனிகொடுக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார்

*முதலாவது குறிப்பு: நாம் அனைவரும் கனிகொடுக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். இது தேவனுடைய மாறாத சித்தம். இது ஏதோ மாற்றம் அடையக்கூடியதல்ல. மனிதனை தேவன் படைத்ததிலிருந்தே இது உண்மையாயிருக்கிறது. இந்த நோக்கத்திற்காகவே தேவன் மனிதனைப் படைத்தார். இது ஆதியாகமம் **1:27-28**ல் கூறப்பட்டுள்ளது. மனிதனை தேவன் படைத்ததையும், எந்த நோக்கத்திற்காக மனிதன் படைக்கப்பட்டான் என்பதையும் இப்பகுதி விவரிக்கிறது.*

27 தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச்

சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.

28பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்தின் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.

(ஆதியாகமம் 1:27-28)

ஐந்து காரியங்களை மனிதன் செய்யவேண்டுமென்று தேவன் விரும்புகின்றார்.

1. கனிகொடுக்க வேண்டும்

2. பெருக வேண்டும்

3. நிரப்ப வேண்டும்

4. கீழ்ப்படுத்த வேண்டும்

5. ஆட்சி செய்ய வேண்டும்.

இந்த நோக்கங்களுக்காக தேவன் மனிதனைப் படைத்தார். தேவனுடைய நோக்கங்கள் மாறுவதில்லை. மனிதனுடைய தவறுதலால் இவைகள் நிறைவேறுவதில் காலதாமதமானாலும், தேவன் தமது நோக்கங்களை நிறைவேற்றியே தீர்ப்பார்.

*புதிய படைப்பில் இயேசு கிறிஸ்துவில் இதே நோக்கங்களை தேவன் மீண்டும் புதுப்பிக்கிறார். புதிய ஏற்பாட்டின் பல பகுதிகளில் இது தெளிவாக கூறப்பட்டுள்ளது. குறிப்பாக அப்போஸ்தலனாகிய பவுல் அவர் ஊழியம் செய்த கிறிஸ்தவர்களுக்காக ஜெபித்த ஒரு ஜெபத்தைக் கூறலாம். இந்த அழகான ஜெபம் கொலோசெயர் **1:9-12**ல் கூறப்பட்டுள்ளது. இந்த ஜெபத்தில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு வார்த்தையும்*

சரியான நோக்கத்தோடு கூறப்பட்டுள்ளது. இதில் ஒரு எதிர்மறையான வார்த்தையும் இல்லை.

9இதினிமித்தம், நாங்கள் அதைக்கேட்ட நாள்முதல் உங்களுக்காக இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிறோம்; நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும்,

10சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும்,

11சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடியசாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல்செய்கிறோம்.

12ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும், (கொலோசெயர் 1:9-12)

இந்த வசனங்களில் கூறப்பட்டுள்ள அனைத்து நம்பிக்கையான வார்த்தைகளையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். கொலொசேயப் பட்டணத்துக் கிறிஸ்தவர்கள் தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவை பெற்றிருக்காமல் “தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிறைந்திருக்க வேண்டுமென்று” முதலாவதாக பவுல் கூறுகிறார். எல்லா ஞானத்தோடும் ஆவிக்குரிய விவேகத்தோடும் இதனைப் பெற்றுக்கொள்ள முடியும்: ஏதோ கொஞ்சம் ஆவிக்குரிய விவேகத்தோடு அல்ல எல்லா ஆவிக்குரிய விவேகத்தோடு இதனைப் பெற முடியும் (வசனம் 9) அவர்கள் ‘‘சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தரவேண்டுமென” பவுல்

ஜெபிக்கிறார் (வசனம் 10). இது தான் தேவ ஞானத்தில் நூறு மடங்கு வளருதல் ஆகும். "எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவேண்டும்" என்று (வசனம் 11) மீண்டும் பவுல் ஜெபிக்கிறார். ஏதோ சிறிதளவு வல்லமையில் அல்ல "எல்லா வல்லமையிலும் பலப்படுத்தப்படவேண்டும்." இதன் பலனாக "நீடிய சாந்தம்" கிடைக்கும் (வசனம் 11).

பொறுமை அல்லது சாந்தம் என்பது விதைக்கிறவனுடைய உவமையில் முக்கியமான வார்த்தையாகும். இங்கே பவுல் பொறுமையும், நீடிய சாந்தமும், சந்தோஷமும் நமக்கு வேண்டுமென்று கூறுகிறார். ''பிதாவாகிய தேவன் ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினார்" என்ற உண்மையை பவுல் வெளிப்படுத்துகிறார் (வசனம் 12). ஒளியிலுள்ள ராஜ்யத்தில் நமக்குள்ள சுதந்தரத்திற்குள் பிரவேசிக்க நமக்கு தேவையான ஆசீர்வாங்களை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

தேவனுடைய வார்த்தையில் தேவ சித்தம் புதைந்துள்ளது. நாம் கனிதர வேண்டுமென்று அவர் விரும்புகிறார். ஒவ்வொரு நல்ல செயல் மூலமாகவும் வெற்றியடையவும், ஒவ்வொரு காரியத்திலும் அவரைத் திருப்தி செய்யவும் தேவன் விரும்புகிறார். இதனை நிறைவேற்ற நம்மை அவர் தகுதிப்படுத்தியும், ஆயத்தப்படுத்தியும் இருக்கிறார்.

ஒவ்வொரு நற்கிரியைகளிலும் நாம் கனிகொடுக்கிறவர்களாக இருக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார் என நாம் ஏன்கெனவே பார்த்தோம். இது தேவனுடைய சித்தம். அவருடைய சித்தத்தைக் குறித்து எந்தவிதமான கேள்வியும் இல்லை. அவருடைய சித்தத்திற்கு நாம் எவ்விதம் செயல்படுகிறோம் என்பதே கேள்வி.

தேவன் நிறைவான கொடையை ஏற்படுத்தியிருக்கிறார்.

இரண்டாவது ஒரு காரியத்தை முக்கியத்துவப்படுத்தி கூற விரும்புகிறேன். அது என்னவென்றால் நாம் கனிகொடுக்க வேண்டுமென்பதற்காக தேவன் நமக்கு முழு நிறைவான கொடையை ஏற்படுத்தியிருக்கிறார். "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு தேவன் நம்மை தகுதிப்படுத்தியும் அதற்கேற்றவாறு நம்மை ஆயத்தப்படுத்தியும் இருக்கிறார்." (கொலோசெயர் **1:12**) இந்த உண்மை புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. இது குறித்து தேவன் நமக்குக் கொடுத்துள்ள முழுக்காரியங்களைக் குறித்த ஒரு வல்லமையான கூற்று கீழே தரப்பட்டுள்ளது.

> ***3 தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி,***
>
> ***4 இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.***
> ***(2 பேதுரு 1:3,4)***

''அவருடைய திவ்விய வல்லமை'' என்கிற சொற்றொடரைக் கவனியுங்கள். தேவனுடைய முழுமையாக எங்கும் நிறைந்துள்ள தன்மை, "அவருடைய எல்லையற்ற வல்லமை ஆகியவை நமக்கு வேண்டிய அனைத்தையும் கொடுத்துள்ளது." வாழ்க்கைக்கும், தெய்வ பக்திக்கும் தேவையான அனைத்தையும் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். இதனை இரண்டு விதத்தில் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். முதலாவது "நம்மை

அழைத்தவரை அறிகிற அறிவினாலே"யும் (வசனம் 3). இரண்டாவது "மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களின் மூலமும்" (வசனம் 4) நாம் பெற்றுக் கொள்கிறோம். இத்தகைய ஆசீர்வாதம் இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவின் மூலமும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை பயன்படுத்திக் கொள்வதின் மூலமும் நமக்குக் கிடைக்கிறது.

இது குறித்து நான் வழக்கச் சொல் ஒன்றைக் கூற விரும்புகிறேன். இதனை நான் அடிக்கடி கூறுவதில்லை: ***வாக்குத்தத்தங்களில் நமக்குத் தேவையான அனைத்தும் அடங்கியிருக்கின்றன.*** தேவனுடைய வாக்குத்தத்த வசனங்களில் நம்முடைய தேவைகள் எதுவோ அவை அனைத்திற்குமான ஆசீர்வாதங்கள் அடங்கியுள்ளன. நீங்கள் ஒரு வேளை இவ்வாறு கேட்கலாம், "தேவன் நமக்கு அனைத்துக் காரியங்களையும் வைத்திருப்பாரென்றால் அது எங்கே உள்ளது?" இதற்கான பதில்: இவைகள் அனைத்தும் தேவனுடைய வாக்குத்தத்தங்களில் அடங்கியுள்ளன. இந்த வாக்குத்தத்த வசனங்களை தேவைக்கேற்ப நாம் பயன்படுத்திக் கொள்ளும்போது அந்த நன்மைகளை நாம் கண்டடையலாம்.

வாக்குத்தத்த வசனங்களைத் தேவைக்கேற்றவாறு நாம் பயன்படுத்திக் கொள்வதில் இரண்டுவித அற்புதமான பலன்கள் நமக்குக் கிடைக்கின்றன. முதலாவது தேவனுடைய தன்மையில் நாம் பங்கு கொள்கிறோம். தேவனுடைய முழுத் தன்மையும் நம்மிடம் இறங்கி வருவதாய் அவருடைய தன்மையில் நாம் பங்கடைகிறோம். இரண்டாவதாக இதன் மூலம் நமக்குக் கிடைக்கும் எதிர்மறையான பலன் என்னவென்றால், இச்சையினால் உலகத்தில் உண்டான கேட்டுக்கு நாம் தப்பித்துக் கொள்ளலாம் (2 பேதுரு 1:4). தேவனுடைய தன்மையில் நாம் பங்கு கொள்வதைக் குறித்தும் இச்சையினாலுண்டான கேட்டுக்கு நாம் தப்பித்துக் கொள்வதைக் குறித்தும் நீங்கள்

என்ன நினைக்கிறீர்கள்? இது உங்களுக்கு சிறந்த ஒரு காரியமாகத் தோன்றவில்லையா? இதற்குத் தேவையான முழுமையான காரியங்களை தேவன் ஏற்படுத்தியுள்ளார். இதனைச் செய்ய உங்களுக்கும் எனக்கும் தேவன் கிருபையளித்துள்ளார். நம்முடைய தேவைகள் அனைத்தும் ஏற்கெனவே நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே இதற்கு இரு பக்கங்கள் உள்ளன. ஒரு பக்கம், உங்களுடையது: தேவனுடைய சிறந்தவைகளை ஆசீப்பீர்களென்றால் மறுபக்கம் தேவனுடையது: இதனை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர் விரும்புவதால் அதனை உங்களுக்கு முழுமையாக வைத்துள்ளார். எனவே முக்கியமான தீர்மானம்: நீங்கள் தேவனுடைய சிறந்தவைகள் வேண்டுமென்று விரும்புகிறீர்களா? ஒரு காரியத்தை தேவன் உங்களுக்காகச் செய்ய முடியாது. அது என்னவென்றால்: உங்களுக்காக அவர் தீர்மானங்கள் எடுக்க முடியாது. உங்களுடைய தீர்மானங்களை நீங்கள் தான் எடுக்க வேண்டும்.

தேவனுடைய சிறந்தவைகள் உங்களுக்குத் தேவையெனில் நீங்கள் கடைப்பிடிக்கவேண்டிய சில குறிப்புகளைக் குறித்து பின்வரும் அத்தியாயங்களில் நான் விவரிக்க உள்ளேன். இந்தக் குறிப்புகளை நடைமுறைப்படுத்துவது எப்படி என்றும் விவரமாகக் கூற உள்ளேன். எட்டு வகையான குறிப்புகள் உள்ளன. அவைகளுக்கு அடித்தளமாக மூன்று காரியங்கள் உண்டு. முதலாவது வேத வாக்கியங்கள், இரண்டாவது நாற்பது ஆண்டுகால எனது சொந்த அனுபவம். மூன்றாவது மற்றவர்களுடைய அனுபவத்தைக் கூர்ந்து நோக்கி அதன் மூலம் பெற்ற அனுபவம்.

பல நாடுகளைச் சார்ந்த, பலவித இன, பாரம்பரியங்களைக் கொண்ட மக்களோடு இணைந்து வாழும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அப்படிப்பட்ட

மக்களில் "நூறு மடங்கு" வெற்றி வாழ்க்கை வாழ்ந்த மக்களைக் குறிப்பாக நான் கவனித்ததுண்டு. அவர்களது வெற்றி வாழ்க்கைக்குக் காரணமான காரியங்களை நான் கற்றுக் கொண்டேன். அந்த வெற்றி வாழ்க்கைக்கான குறிப்புகள் அல்லது தேவனுடைய சிறந்தவைகளை பெற்றுக் கொள்ள நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்து உங்களோடு பகிர்ந்து கொள்ளப்போகிறேன்.

3

தேவனுடைய சிறந்தவைகளை ஆசித்தல்

"தேவனுடைய சிறந்தவைகளை ஆசித்தல்" என்ற இந்த பொருள் குறித்த முதன்மையான தேவை: தேவனுடைய சிறந்தவைகளை விரும்புவதாகும். இதனை நீங்கள் உணருகிறீர்களா? தேவனுடைய சிறந்தவைகளை விரும்புவீர்களென்றால் நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியம்: நீங்கள் தேவனுடைய சிறந்தவைகளை விரும்புவதற்குத் தீர்மானிக்க வேண்டும். இதுவே அடிப்படையான தேவையான தீர்மானமாகும். நீங்கள் தேவனுடைய சிறந்தவைகளை ஆசிக்க வேண்டும். தேவனுடைய சிறந்தவைகளைத் தவிர வேறு எந்த ஒரு காரியத்தையும் நீங்கள் விரும்பப்போவதில்லை என்று நீங்கள் தீர்மானிக்க வேண்டும். இந்த விருப்பத்தைத் தேவன் நம்மீது திணிக்க மாட்டார். இதனை நாம் மட்டுமே தீர்மானிக்க வேண்டும்.

இதனை ஏசா, யாக்கோபு ஆகிய இரட்டை சகோதரர்களின் கதையின் மூலமாக நான் விளக்க விரும்புகிறேன். இக்கதையின் மூலம் இப்பொருள் குறித்த அடிப்படைக் கருத்தை நான் கூற விரும்புகிறேன். யாக்கோபு மற்றும் ஏசா குறித்துத் தேவன் கூறிய சில அற்புதமான காரியங்களை வேத வாக்கியங்களில் நாம் காணலாம். உதாரணமாக யாக்கோபின் சந்ததியாராகிய இஸ்ரவேல் மக்களிடத்தில் தேவன் கூறிய வார்த்தைகளை மல்கியா **1:2-3**ல் நாம் காணலாம்.

[2]. . .ஏசா யாக்கோபுக்குச் சகோதரனல்லவா? ஆகிலும் யாக்கோபை நான் சிநேகித்தேன்.

[3]ஏசாவையோ நான் வெறுத்தேன்;. . . (மல்கியா 1:2-3)

இதனைக் கவனியுங்கள்: அவர்கள் இருவரும் இரட்டைச் சகோதரர்கள். இருப்பினும் தேவன் யாக்கோபை சிநேகித்து ஏசாவை வெறுத்ததாகக் கூறுகிறார். ஒரு சகோதரனிடத்தில் தேவன் நடந்துகொள்ளும் முறை மற்றொரு சகோதரனிடத்தில் நடந்து கொள்வதற்கு முற்றிலும் மாறுபட்டுள்ளது. ஒருவனை நேசித்து மற்றவனை வெறுக்கிறார். இந்த இரட்டையர்களைக் குறித்து மேலும் அதிகமாக ரோமருக்கு எழுதிய நிருபத்தில் பவுல் கூறுகிறார்.

[10]இதுவுமல்லாமல், நம்முடைய பிதாவாகிய ஈசாக்கு என்னும் ஒருவனாலே ரெபெக்காள் கர்ப்பவதியானபோது,

[11]பிள்ளைகள் இன்னும் பிறவாமலும், நல்வினை தீவினை ஒன்றும் செய்யாமலுமிருக்கையில், தேவனுடைய தெரிந்து கொள்ளுதலின்படியிருக்கிற அவருடைய தீர்மானம் கிரியைகளினாலே நிலைநிற்காமல் அழைக்கிறவராலே நிலைநிற்கும்படிக்கு,

[12]"மூத்தவன் (ஏசா) இளையவனுக்கு (யாக்கோபு) ஊழியஞ் செய்வான்" என்று அவளுடனே (ரெபேக்காள்) சொல்லப்பட்டது.

[13]அப்படியே, "யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன்" என்றும் எழுதியிருக்கிறது. (ரோமர் 9:10-13)

ஏசாவும் யாக்கோபும் ஒரே தாய் தந்தைக்குப் பிறந்தவர்கள். அவர்கள் சகோதரர் மட்டுமல்ல; அவர்கள் இரட்டையர்கள். அவர்கள் இரட்டையர்களாயிருந்தாலும் அவர்கள் பிறக்குமுன்பே ஏசாவைவிட யாக்கோபை தேவன்

நேசித்தார்.

ரோமர் நிருபத்தில் உள்ள இந்த வாக்கியங்கள் இரண்டு கேள்விகளை எழுப்புகிறது. முதலாவது தேவன் விரும்பிய எந்தக் காரியம் யாக்கோபிடத்தில் காணப்பட்டது? இரண்டாவது: தேவன் விரும்பாத எந்தக் காரியம் ஏசாவினிடத்தில் காணப்பட்டது? சுருக்கமாகக் கூறினால் தேவன் ஏன் யாக்கோபை நேசித்து ஏசாவை வெறுத்தார்?

வேதத்தில் குறிப்பிட்டுள்ளபடி அவர்களுடைய குணாதிசயங்களைக் குறித்து நான் விரிவாகக் கூற விரும்புகிறேன். முதலாவது ஏசாவைக் குறித்துக் காண்போம். “ஏசா மிகவும் நல்லவன், அருமையானவன்” அவன் பலசாலியாகவும், சுறுசுறுப்பானவனாகவும், ஆண்மையுள்ளவனாகவும், சிறந்த வேட்டையாடுபவனாகவும் விளங்கினான். அவன் யாருக்கும் எந்தத் தீங்கும் செய்ததில்லை. அவன் தன் தகப்பனுக்கு மிகவும் பிரியமானவன். இருவருக்கும் வாக்குவாதங்கள் வந்தபோதெல்லாம் ஏசாவை மேற்கொண்ட புத்திக் கூர்மையான யாக்கோபுக்கு ஏசா இணையானவன் அல்ல.

யாக்கோபைக் குறித்த காரியம் என்ன? இவன் தந்திரமானவன். தீர்மானமாக எதிலும் செயல்படுபவன். வாக்குவாதங்களில் ஒருபோதும் தோற்றுப்போனவன் அல்ல. இந்தக் குணத்தை யாரும் விரும்பமாட்டார்கள். ஒரு கிண்ணம் கூழுக்காக ஏசாவின் சேஷ்ட புத்திரபாகத்தைப் பிடுங்கிக் கொண்டான். ஒரு கலசம் கூழுக்காக பசியாயிருந்த தனது சகோதரனாகிய ஏசாவிடமிருந்து விலைமதிக்க முடியாத சேஷ்ட புத்திரபாகத்தை அவன் விற்றுப்போட வைத்தான். பேரம் பேசி பெறக்கூடிய காரியம் ஒன்று உண்டென்றால் அது இதுவாகத்தான் இருக்க முடியும். தனது தகப்பனாரை ஏமாற்றி ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டான். தனது மாமா மற்றும் மாமனாராகிய லாபானை ஏமாற்றி திரண்ட

ஆஸ்தியை அபகரித்துக் கொண்டான். எந்த விதத்திலும் "யாக்கோபை நல்லவன் என்றோ அருமையானவன் என்றோ" யாரும் கூற மாட்டார்கள். இன்றைய சூழ்நிலையில் அநேகர் ஏசாவைத்தான் நல்லவன் என்று தெரிந்தெடுப்பர். ஆனால் தேவன் அப்படிச் செய்யவில்லை.

ஏன் தேவன் யாக்கோபை விரும்பி தெரிந்து கொண்டார்? ஒரு முக்கியமான காரணமுண்டு என்று நான் நம்புகிறேன். அதைக் குறித்து நான் விவரமாகக் கூற விரும்புகிறேன். தேவன் தனக்குக் கொடுக்கவிருக்கும் காரியத்தை யாக்கோபு மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டான். ஆனால் ஏசாவோ அவ்வாறு இருக்கவில்லை.

*இந்த வித்தியாசத்தைக் குறித்து தேவன் எவ்வாறு நினைக்கிறார் என்பது குறித்து எபிரெயர் **12:15-17**ல் நாம் வாசிக்கிறோம். கிறிஸ்தவர்களாகிய நாம் நினைப்பதற்கு இது முற்றிலும் மாறுபட்டது. ஏசாவின் நடவடிக்கைகள் குறித்து எபிரெயர் நிருபத்தின் ஆக்கியோன் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.*

> ***15 ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும் யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பி கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும்,***
>
> ***16 ஒருவனும் வேசிக்கள்ளனாகவும், ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப்போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்.***
>
> ***17 ஏனென்றால், பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர் விட்டு, கவலையோடே தேடியும் மனம்மாறுதலைக்***

காணாமற்போனான். (எபிரெயர் 12:15-17)

*ஏசா இங்கே இவ்வாறு வர்ணிக்கப்படுகிறான் என்பதைக் கவனியுங்கள். அவன் வேசிகளோடு ஒப்பிடப்படுகிறான். "தேவனற்றவனாகவும்" (சீர்கெட்டவனாகவும்) வர்ணிக்கப்படுகிறான். ஏனெனில் ஒரு வேளை போஜனமாகிய கூழுக்காக தன் சேஷ்ட புத்திர பாகத்தை விற்றுப் போட்டான். "தன் சேஷ்ட புத்திர பாகத்தை ஏசா அலட்சியம்பண்ணினான்" என்று ஆதியாகமம் **24:34**ல் நாம் காண்கிறோம். தேவனுடைய நியதிப்படி தேவன் நமக்கு கொடுப்பதைக் குறித்து அலட்சியமாய் இருப்போமென்றால் அது "தேவனற்ற தன்மையைக்" குறிக்கிறது. தேவன் அதை வெறுக்கிறார்.*

மாறாக யாக்கோபைக் குறித்துக் காண்கையில் யாக்கோபு தேவன் தனக்குக் கொடுப்பதைக் குறித்து எந்த நிலையில் இருந்தான் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். ஒரு முக்கியமான காரியத்தைக் குறித்து மாத்திரம் நான் கூற விரும்புகிறேன். யாக்கோபு தனது நாட்டிற்கு திரும்பி வரும்போது வழியில் தேவனால் அனுப்பப்பட்ட ஒரு தூதனை இரவு நேரத்தில் சந்திக்கிறான். நாம் அறிந்தபடி அவரோடு இரவு முழுவதும் போராடுகிறான். இது அவனுடைய இயல்பு. ஏனெனில் யாக்கோபு ஒரு மல்யுத்த வீரன். எப்போதும் வெற்றி பெறக்கூடியவன்.

24யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான்; அப்பொழுது ஒரு புருஷன் பொழுது விடியுமளவும் அவனுடனே போராடி,

25அவனை மேற்கொள்ளாததைக் கண்டு, அவனுடைய தொடைச்சந்தைத் தொட்டார்; அதினால் அவருடனே போராடுகையில் யாக்கோபின் தொடைச்சந்து சுளுக்கிற்று.

26அவர்: நான் போகட்டும், பொழுது விடிகிறது என்றார். அதற்கு அவன்; நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் என்றான்.

27 ***அவர்: உன் பேர் என்ன என்று கேட்டார்; யாக்கோபு என்றான்.***

28 ***அப்பொழுது அவர்: உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்றார். (ஆதியாகமம் 32:24-28)***

*இங்கே "இஸ்ரவேல்" என்ற சொல்லுக்கு "தேவனோடு போராடுதல்" என்று பொருள். எவ்வளவு பொருத்தமாக உள்ளது! யாக்கோபு ஒரு போராடுகிறவன், ஒரு மல்யுத்த வீரன். எப்படியிருந்தாலும் அவனுக்கு ஒரு நோக்கம் இருந்தது. அவன் தேவனுடைய சிறந்ததை விரும்பினான். அந்த தூதனைப்பார்த்து ''நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்" என்று கூறுகிறான் (வசனம் **26**). இதுதான் தேவன் யாக்கோபை விரும்பியதற்கு முக்கியமானக் காரணம் என்று நான் நம்புகிறேன். யாக்கோபுடைய தவறான குணாதிசயங்களை தேவன் சரிசெய்யவில்லை. குணாதிசயங்களிலுள்ள குறைபாடுகளைத் தேவன் ஒரு போதும் சரிசெய்வதில்லை. தேவனுடைய சிறந்தவைகளைத் தவிர வேறு ஏதும் தனக்குத் தேவையில்லை என யாக்கோபு தீர்மானித்திருந்தால் அவன் எப்படிப்பட்டவனாக வேண்டுமென்று தேவன் விரும்பினாரோ அந்த அளவுக்கு அவனை மாற்ற தேவனால் முடிந்தது. இதற்கான நிபந்தனையும், ஆரம்பத்திற்கான காரணமும் யாதெனில்: யாக்கோபு தேவனுடைய சிறந்தவைகளுக்கும் குறைவான வேறு எந்தக் காரியத்தையும் யாக்கோபு விரும்பவில்லை.*

உங்களிடம் ஒரு கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன்: தேவனுடைய சிறந்தவைகளுக்கும் குறைவான வேறு எந்தக் காரியத்தையும் நான் விரும்பமாட்டேன் என்ற இதே தீர்மானத்தையும் நீங்கள் செய்வீர்களா?

4

இயேசுவே நமது குறிக்கோள்

நீங்கள் தேவனுடைய சிறந்தவைகளை ஆசித்தால்... என்ற இந்த வாக்கியத்தை முடிப்பதற்கான இரண்டாவது முறை: "இயேசுவையே குறிக்கோளாகக் " கொள்ள வேண்டும். எபிரெயர் பன்னிரண்டாம் அதிகாரத்தில் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்.

[1]ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.

[2]அவர் தமக்குமுன் வைத்திருக்கிற சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். (எபிரெயர் 12:1-2)

இந்த நிருபத்தை ஆக்கியோன் முதலாவது; மேகம் போன்ற திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்திருக்கிறதாக கூறுகிறார். அவர் இதற்கு முன்பதாக 11ஆம் அதிகாரத்தில் தேவனுடைய சிறந்தவைகளை நாடி வெற்றி கண்ட பழைய ஏற்பாட்டு பக்தர்களைக் குறித்து கூறப்பட்ட காரியங்களை இங்கே குறிப்பிடுகிறார். இந்த நிருபத்தை ஆக்கியோன்,

மேகம் போன்ற திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துள்ளதாகக் கூறுகிறார். அவர்கள் அனைவரும் தேவனுடைய சிறந்தவைகளைக் கண்டடைவதை தங்கள் வாழ்விலும் அனுபவத்திலும் நிரூபித்துள்ளனர். இது தான் ஆரம்பக் குறிப்பாகும்.

இரண்டாவதாக, தேவனுடைய சிறந்தவைகள் நமக்குத் தேவையென்றால் நாம் ஒரு ஓட்டப்பந்தயத்தில் ஓட வேண்டியது அவசியமானதாகும். ஓட்டப்பந்தயத்தில் வெற்றிகரமாக ஓட வேண்டுமென்றால் ஓட்டத்திற்கு இடையூறாக இருப்பவற்றை நாம் களைந்து போட வேண்டும். ஓட்டப்பந்தயத்தில் ஓடுபவன் தேவையற்ற ஒரு அவுன்ஸ் பாரத்தைக் கூட தானோ தனது உடையிலோ எடுத்துச் செல்லமாட்டான். நம்மைப் பொறுத்தவரை நம்மை சுலபமாக மேற்கொள்ளும் காரியம் பாவம் ஆகும்.

மூன்றாவதாக, நாம் பொறுமையோடே ஓட வேண்டும். விதைப்பவனைப் பற்றிய உவமையில் நல்ல நிலத்தைப் பற்றிக் கூறுகையில் மூன்று நிபந்தனைகளைக் குறித்து ஏற்கெனவே நான் குறிப்பிட்டுள்ளேன். அவைகள்: வசனத்தைக் கேட்டல், வசனத்தை மனதில் நிலைநிறுத்தி வைத்தல் மற்றும் பொறுமையோடே இருந்து கனி கொடுத்தல் ஆகியனவாகும்.

வெற்றிக்கான அடித்தளத்தை அமைத்தபின்பு எபிரெயு நிருபத்தின் ஆக்கியோன், மிகவும் முக்கியமான ஒரு குறிப்பைப் பற்றிக் கூறுகிறார். “விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.” (எபிரெயர் **12:2**) இது தான் வெற்றிக்கான திறவுகோல்.

நான் இரண்டு சுலபமான வார்த்தைகளைக் கூறுகிறேன்: அவர்தான் நமது விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிறார். இயேசுதான் துவக்குகிறவர்

என்று நாம் எல்லோரும் அறிவோம். ஆனால் இயேசு தான் முடிக்கிறவர் என்பதை நாம் சில சமயங்களில் மறந்து விடுகிறோம். நமது விசுவாசம் முழுமை பெற வேண்டுமானால் இயேசுவையே நாம் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட வேண்டும். இயேசுவையே நம் குறிக்கோளாகக் கொண்டு ஆரம்பித்தும் பின்பு வழி விலகி வேறு எதையாவது நோக்குவது சரியல்ல. அப்படி நாம் செய்வோமென்றால் நமது விசுவாசம் முற்றுப்பெறாது.

இது குறித்து நான்கு சுலபமான காரியங்களை நான் உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவைகள் ஒவ்வொன்றும் நாம் ஏன் இயேசுவை நம் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட வேண்டுமென்பதற்குக் காரணமாக அமைந்துள்ளன.

இயேசுவே நமது ஆண்டவர்

இயேசுவே நமது ஆண்டவர். இயேசுவை ஆண்டவர் என்று நாம் அறிக்கையிட்டால்தான் நாம் இரட்சிப்படைய முடியும். அவர் நமது ஆண்டவராக இருப்பாரென்றால் நமது முக்கிய நோக்கம் அவரைத் திருப்தி செய்வதாகவே இருக்கும். அவரை ஆண்டவர் என்று சொல்வதன் அர்த்தம் இதுவே. நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தின் மூலமும் அவரைத் திருப்தி செய்ய வேண்டுமென்றால் நமது கண்களைத் தொடர்ந்து இயேசுவின் மீது வைத்திருக்க வேண்டும். எப்பொழுதாவது அவரை நாம் நோக்கிப் பார்க்கையில் நாம் செய்யும் காரியம் அவரைத் திருப்தி செய்யாது என்று உணருவோமென்றால் அதை செய்யாமலிருப்பதற்கு இதுவே போதுமான காரணமாக இருக்கும். இயேசுவையே நோக்கி நம் கண்கள் பதிக்கப்பட்டிருந்தாலொழிய நமக்கு இத்தகைய ஒரு உணர்வு ஏற்படாது.

இயேசுவே நமது தகுதி

இயேசுவே நீதிக்குத் தகுதியானவர். அத்தேனே பட்டணத்தாருக்கு பவுல் கூறும் ஒரு குறிப்பிலிருந்து இதனை நாம் அறியலாம்:

> [31]***மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றான்.***
>
> ***(அப்போஸ்தலர் 17:31)***

தேவனுடைய நியாயாதிபதியாக இருந்து இந்த உலகத்தை நியாயந்தீர்க்கப் போகிறவர் யாரென்றால் தேவனால் மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டவர். அவர் தான் இயேசு கிறிஸ்து. அந்த மனிதன் மூலமாகவே தேவன் இந்த உலகத்தை நியாயந்தீர்க்கப்போகிறார்.

இது நமக்கு இரண்டு காரியங்களைக் கூறுகிறது: இயேசு நமது நியாயாதிபதி, மட்டுமல்லாது அவர் நமது நீதியின் தரத்தை நிர்ணயிப்பவராகவும் இருக்கிறார். இயேசுவின் தரத்தை வைத்தே நாம் நியாயம் தீர்க்கப்படுவோம். தேவனுக்கு ஒரே ஒரு நீதியின் தரம் மட்டுமே உண்டு. தேவனுடைய பார்வையில் எது நீதியானது என்று அறிந்துகொள்ள விரும்புவோமென்றால் நாம் செய்ய வேண்டிய காரியம்: நாம் எப்பொழுதும் இயேசுவை மாத்திரம் நோக்கிப் பார்க்க வேண்டும். நாம் கிறிஸ்தவர்களை நோக்கிப் பார்க்கலாம். ஆனால் இயேசு செய்திராத காரியங்களை அவர்கள் செய்வார்கள். அவர்களை நமது நீதியின் அளவுகோலாகக் கொள்ள முடியாது. ஏனெனில் அவர்கள் தேவனுடைய தகுதிக்குட்பட்டவர்கள் அல்ல. தேவனுடைய நீதியின் தரத்தை நாம் அறிந்து கொள்ள விரும்பினால் நமது

கண்கள் இயேசுவையே நோக்கினவைகளாக இருக்க வேண்டும்.

இயேசு நமக்கு மாதிரி

பேதுரு எழுதின முதலாம் நிருபத்தில் நாம் காண்கிறது போல இயேசுவே நமது மாதிரியாகவும் உதாரணமாகவும் விளங்குகிறார்.

> ***21 இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப்போனார். (1 பேதுரு 2:21)***

இயேசு நமக்கு முன்மாதிரியாக இருக்கின்றார். ஏனெனில் அவர் நமக்கு முன்பாகச் சென்றிருக்கிறார். சரியான பாதையில் செல்ல வேண்டுமென்றால் அவர் எங்கு தமது அடிச்சுவடுகளை விட்டுச் சென்றாரோ அதன் மேல் நமது பாதங்களை வைத்து நடந்து செல்ல வேண்டும். இவையெல்லாம், நாம் இயேசுவையே நமது குறிக்கோளாகக் கொண்டு நமது கண்களை அவர் மீது வைத்து செயல்பட வேண்டுமென்ற ஒரே கருத்தை அடிப்படையாகக் கொண்டது.

இயேசுவே சுவிசேஷத்தின் உயிர் நாடி

இயேசுவை நாம் ஏன் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட வேண்டுமென்பதற்கு மற்றுமொரு காரணத்தை நான் கூற விரும்புகிறேன். இது ஒரு மிகவும் சாதாரணமான, நடைமுறைக்கு ஏற்ற ஆனால் மிகவும் முக்கியமான காரணமாகும். முழு சுவிசேஷமும் இயேசு நமக்காக நிறைவேற்றிய காரியத்தை மையமாகக் கொண்டதாகும். பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபத்தில் இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவனுடைய

காரியங்களில் முக்கியமானவைகளை வரிசைப்படுத்திக் கூறலாம். ஆனால் இங்கு பவுல் கூறும் காரியங்கள் "மிகவும் முக்கியமானவையாகும்." இயேசுவைப்பற்றி மூன்று சாதாரணமான குறிப்புகளைப் பவுல் கூறுகிறார்:

3நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து,

4அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து, (1கொரி. 15:3-4)

இதுதான் சுவிசேஷம். இவைகள் தான் முதல்தரமான முக்கியத்துவம் வாய்ந்தவைகள். இயேசுவை மையமாகக் கொண்ட இந்த மூன்று காரியங்களோடு ஒப்பிடுகையில் மற்ற அனைத்துக் காரியங்களும் முக்கியத்துவத்தில் குறைந்தவைகளே. அந்த மூன்று காரியங்கள்: அவர் மரித்தார், அவர் அடக்கம் பண்ணப்பட்டார், மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். இயேசுவை மையமாகக் கொண்ட இந்த உண்மைகளை விட்டு விலகிச் செல்ல நாம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

தனது வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் சிறைச் சாலையிலிருந்து தீமோத்தேயுவுக்கு பவுல் தனது இரண்டாம் நிருபத்தை எழுதுகையில் தீமோத்தேயுவை இது குறித்து எச்சரிக்கிறார்:

8தாவீதின் சந்ததியில் பிறந்த இயேசுகிறிஸ்து, என் சுவிசேஷத்தின்படியே, மரித்தோரிலிருந்தெழுப்பப்பட்டவரென்று நினைத்துக்கொள்.

9இந்தச் சுவிசேஷத்தினிமித்தம் நான் பாதகன்போலக் கட்டப்பட்டு, துன்பத்தை அநுபவிக்கிறேன்; தேவவசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை.

(2 தீமோ. 2:8-9)

*இந்த முக்கியமான வார்த்தைகளைக் கவனியுங்கள்: "இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்தெழுப்பப்பட்டவரென்று நினைத்துக்கொள். இதுவே என் சுவிசேஷம்" எவ்வளவு சாதாரணமானதாக உள்ளது: **1** கொரிந்தியர் **15**ஆம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளபடி, முழு சுவிசேஷமும் இயேசுவை மையமாகக் கொண்டுள்ளது. அவரது மரணம், அடக்கம் மற்றும் வெற்றிகரமான உயிர்த்தெழுதல்.*

இந்த முக்கியமான குறிப்புகளிலிருந்து ஒருபோதும் விலகிச் செல்ல வேண்டாமென்றும் இயேசுவை மாத்திரம் கண்கள் நோக்கியிருக்க வேண்டுமென்றும் தீமோத்தேயுவுக்கு பவுல் கூறுகிறார்.

கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரையில் மிகவும் உலகப் பிரகாரமாகவோ அல்லது மிகவும் ஆவிக்குரியவர்களாகவோ மாறும் அபாயம் உள்ளது. அநேக கிறிஸ்தவர்கள் மிகவும் ஆவிக்குரியவர்களாக இருப்பதனால் அநேக காரியங்களை இழந்தவர்கள் போலக் காணப்படுவார்கள். நான் பிரசங்கம் செய்து முடித்தபின்பு மக்கள் சிலசமயம் என்னிடம் வந்து, "சகோதரர் பிரின்ஸ் அவர்களே, இது ஒரு ஆழமான செய்தி நான் எங்கேயாவது தவறு செய்கிறேனா என்று நான் ஆச்சரியப்படுகிறேன்" என்று கூறுவார்கள். "நான் ஏதாவது தவறு செய்கிறேனா" என்று நான் ஆச்சரியப்பட்டதுண்டு. அதிக ஆழமாகச் செல்லக் கூடாது என்று நான் நினைப்பேன்.

நான் அதிகம் ஆழமாகச் செல்வதை விரும்புவதில்லை. ஏனெனில் இயேசுவையும் சுவிசேஷத்தின் மையமாகிய அவரது மரணம், அடக்கம் உயிர்த்தெழுதல் ஆகியவற்றையும் மக்கள் அறிந்து கொள்ள முடியாமற்போகும்.

தீமோத்தேயுவுக்கு பவுல் கூறிய அறிவுரையையே உங்களுக்கும் கூற விரும்புகிறேன்: "இயேசு கிறிஸ்து என் சுவிசேஷத்தின்படியே மரித்தோரிலிருந்தெழுப்பப்பட்டவரென்று

நினைத்துக் கொள்." ***(2 தீமோத்தேயு 2:8)*** *இயேசுவை நினைவு கூற முக்கியமான செயல்முறை வழி என்னவென்றால் இயேசு தாமே கூறிய காரியம் ஆகும். "நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள். . .''* ***(1 கொரி. 11:25)*** *இயேசுவை நினைவு கூறவும் உங்களது கண்களை அவர் மீது பதித்திருக்கவும் நீங்கள் கைக்கொள்ள வேண்டிய மிகவும் சுலபமான வேத வசனத்திற்கும் நடைமுறைக்கும் ஏற்ற ஒரு காரியமாகும் இது. நீங்கள் எப்போதாவது செய்கிறதல்ல. ஆனால் "அடிக்கடி செய்ய வேண்டியது" என்று இயேசு கூறியதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். நமது கண்களைத் தொடர்ந்து அவர் மீது பதித்திருக்க வேண்டுமென்று இயேசு விரும்புகிறார்.*

5

தேவனுடைய வார்த்தையை தியானித்தல்

தேவனுடைய சிறந்தவைகள் உங்களுக்குத் தேவையென்றால் நீங்கள் செய்ய வேண்டிய மிக முக்கியமான மூன்றாவது காரியம்: தேவனுடைய வார்த்தையை தியானம் செய்வதாகும். உங்களுடைய மனதை தேவனுடைய வார்த்தையால் நிரப்புங்கள். இஸ்ரவேல் மக்களை அவர்களுடைய சுதந்தரத்திற்குள் நடத்திச் செல்ல யெகோவா அழைக்கப்பட்டபொழுது தேவன் அவருக்குக் கொடுத்த சில அறிவுரைகளை நாம் உதாரணமாகக் காணலாம்.

> ***[8]இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய். (யோசுவா 1:8)***

இவ்வசனத்தின் கடைசிப் பகுதியாகிய "அப்பொழுது உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய்." என்பதற்கு "நீ தேவனுடைய சிறந்தவைகளைக் கண்டடைவாய்" என்று கூறுவது அதற்கேற்ற சரியான சொற்றொடராகும். இதற்கான நிபந்தனைகள் என்ன? மூன்று வகையான நிபந்தனைகள் கூறப்பட்டுள்ளன. அவைகள் அனைத்தும்

தேவனுடைய வார்த்தையைக் குறித்துக் கூறப்பட்டதாகும்.

1. இந்த வசனம் "உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக".

2. இதனை "இரவும் பகலும் தியானித்துக் கொண்டிருப்பாயாக" அதாவது தொடர்ந்து தியானிக்க வேண்டும்.

3. இதில் "எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்க வேண்டும்."

இதனை மூன்று சொற்றொடரில் குறிப்பிட விரும்புகிறேன். தேவனுடைய சிறந்தவைகள் உங்களுக்குத் தேவையென்றால், உங்களுடைய வழி வாய்க்க வேண்டுமென்றால், உங்களுக்கு வெற்றி வேண்டுமென்றால் நீங்கள் செய்யவேண்டிய மூன்று காரியங்கள்: தேவனுடைய வசனத்தை நினைவு கூறுங்கள், தேவனுடைய வசனத்தைப் பேசுங்கள், தேவனுடைய வசனத்தைச் செயல்படுத்துங்கள். நான் நினைப்பதை முதலில் கூறியுள்ளேன். ஏனென்றால் நீங்கள் நினைக்கவில்லையென்றால் நீங்கள் பேசமுடியாது. நீங்கள் நினைக்காமலும் பேசாமலுமிருந்தால் உங்களால் செயல்பட முடியாது. இந்த மூன்று காரியங்களின் பலன் - வெற்றி - தேவனுடைய சிறந்தவைகள்.

நீங்கள் ஒருவேளை இவ்வாறு கூறலாம்: "அது யோசுவாவுக்குப் பொருந்தும். இது என் வாழ்விலும் கிரியை செய்யும் என்று நான் அறிந்து கொள்ளுவது எப்படி?" முதலாவது சங்கீதத்தில் இதைப் போன்ற வாக்குத்தத்தமும் இதே போதனையும் கூறப்பட்டுள்ளது. அந்த நிபந்தனைகளை நிறைவேற்றுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு அது வாய்க்கும். இதில் எல்லாம் அடங்கியுள்ளது. யாராக இருந்தாலும் சரி. இந்த

நிபந்தனைகளை அந்த நபர் நிறைவேற்ற வேண்டும். அதுதான் காரியம்.

[1]துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்,

[2]கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

[3]அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். (சங்கீதம் 1:1-3)

இந்த கடைசி வாக்கியத்தைக் கவனியுங்கள். "அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்." இதுதான் தேவனுடைய சிறந்தவைகளைக் கண்டடைவதாகும், இதுவே உண்மையான வெற்றி. இந்த நிபந்தனைகளை நிறைவேற்றும் எந்தவொரு மனிதனின் வாழ்க்கையிலும் இது உண்மையாகும். இங்கே ஐந்து விதமான நிபந்தனைகள் கூறப்பட்டுள்ளன. முதல் மூன்றும் எதிர்மறையானவை. அதாவது நீங்கள் செய்யக்கூடாதவை.

1. *துன்மார்க்கருடைய ஆலோசனையில் நீங்கள் நடக்கக் கூடாது.*
2. *பாவிகளுடைய வழியில் நீங்கள் நிற்கக் கூடாது.*
3. *பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் நீங்கள் உட்காரக் கூடாது.*

முக்கியமான காரியம் என்னவென்றால் நீங்கள் எங்கு உங்கள் ஆலோசனையைப் பெறுகிறீர்கள்? நீங்கள் தவறான இடத்தில் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுவீர்களென்றால் உங்களுடைய முழு

வாழ்க்கையையும் தவறான முடிவை நோக்கியே செல்லும். இந்த மூன்று எதிர்மறையான நிபந்தனைகளைத் தொடர்ந்து நீங்கள் செய்ய வேண்டிய இரண்டு நிபந்தனைகள் கூறப்பட்டுள்ளன.

1. *கர்த்தருடைய வேதத்தில் நீங்கள் பிரியமாயிருக்க வேண்டும்.*

2. *இரவும் பகலும் அவருடைய வேதத்தில் நீங்கள் தியானமாயிருக்க வேண்டும்.*

நீங்கள் செய்ய வேண்டிய இவ்விரு காரியங்களும் தேவனுடைய வார்த்தையைப் பற்றியதாகும் என்பதைக் கவனியுங்கள். முதலாவது அவருடைய வேதத்தில் நீங்கள் பிரியமாயிருக்க வேண்டும். இரண்டாவதாக இரவும் பகலும் அவருடைய வேதத்தில் நீங்கள் தியானமாயிருக்க வேண்டும். சரியான முறையில் தியானம் செய்வதே வெற்றிக்கு வழி என்பதை கவனியுங்கள். அவருடைய வேதத்தில் இரவும் பகலும் தியானமாக இருக்க வேண்டும்.

இதற்காக ஒரு பத்து நிமிடம் வேதத்தை வாசிப்பது என்பது அர்த்தமல்ல. உங்களுடைய தியானமானது உங்களுடைய மனதை நிரப்புமளவிற்கு இருக்க வேண்டும். அப்பொழுதுதான் உங்களுடைய எண்ணமெல்லாம் தேவனுடைய வார்த்தையால் நிறைந்திருக்கும். விசுவாசத்தைத் தூண்டக் கூடியதும் அதைக் கட்டியெழுப்பக் கூடியதுமான வேத வாக்கியங்களால் நீங்கள் அப்பொழுது போஷிக்கப்படுவீர்கள். சரியான எண்ணங்கள் மிகவும் முக்கியம். ஏனெனில் நீங்கள் எப்படி சிந்திக்கிறீர்களோ அப்படிதான் உங்கள் வாழ்க்கையும் அமையும்.

மனிதத் தன்மையானது ஒரு பனிக்கட்டியைப்போன்றது என்று நான் சில சமயங்களில் கூறுவதுண்டு. எட்டில்

ஏழுபாகம் தண்ணீருக்குள் இருக்கும். தண்ணீருக்குள் இருப்பதில் ஒரு சிறு பகுதி மட்டும் வெளியில் தெரியும். மனித வாழ்விலும் இது உண்மையே.

ஒருவர் என்ன நினைக்கிறாரோ அதுதான் அவரது வாழ்வை நிர்ணயம் செய்யும். சரியான காரியத்தை தியானித்தால், சரியான வாழ்க்கை வாழ்ந்தால், தேவன் வாக்குப்பண்ணின நற்பலன்கள் உங்களுக்கு வாய்க்கும். செழிப்பும், வெற்றியும் ஆகிய இவைகளே தேவனுடைய சிறந்தவைகள்.

ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தில் கூறப்பட்டுள்ள ஒரு பகுதியைக் கவனியுங்கள். நாம் எப்படி எண்ணுகிறோமோ அவ்வாறே நமது வாழ்க்கையும் அமைகிறது. இந்தப் பகுதியில் தேவன் இவ்வாறு கூறுகிறார்.

8என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்.

9பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது.

10மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும்படிச் செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும் புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ,

11அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான்

அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.
(ஏசாயா 55:8-11)

இங்கே தேவன் நினைவுகளைப் பற்றிக் கூறி ஆரம்பிக்கிறார். இயற்கையிலேயே நமது நினைவுகள் அவருடைய நினைவுகள் அல்ல என்று கூறுகிறார். அப்படியானால் நாம் எப்படி தேவனுடைய நினைவுகளை நினைக்க முடியும்? இதற்கான பதிலை பின்னால் வரும் வசனங்களில் கூறுகிறார். தேவனுடைய வழிகளும் அவர் நினைவுகளும் வானத்துக்குரியவைகள். நமது வழிகளும் நினைவுகளும் இப்பூவுலகத்திற்குரியவைகளாகும். அவைகள் தேவனுடையவைகளைக் காட்டிலும் மிகவும் தாழ்வானவைகள். ஆனால் தேவனுடைய வார்த்தை, அவருடைய வழிகளையும் அவருடைய நினைவுகளையும் பரலோகத்திலிருந்து நமது வாழ்க்கையிலும் நமது உள்ளங்களிலும் கொண்டு வந்து சேர்த்து நாம் விரும்பிய பலனை அளிக்கிறது.

தமது வார்த்தையைக் குறித்து அந்தப் பகுதியிலேயே தேவன் இவ்வாறு கூறுகிறார்:

> ***11 அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.***
>
> ***12 நீங்கள் மகிழ்ச்சியாய்ப் புறப்பட்டு, சமாதானமாய்க் கொண்டுபோகப்படுவீர்கள்; பர்வதங்களும் மலைகளும் உங்களுக்கு முன்பாகக் கெம்பீரமாய் முழங்கி, வெளியின் மரங்களெல்லாம் கைகொட்டும்.***
>
> ***13 முட்செடிக்குப் பதிலாகத் தேவதாரு விருட்சம் முளைக்கும்; காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச்செடி எழும்பும்; அது கர்த்தருக்குக் கீர்த்தியாகவும், நிர்மூலமாகாத நித்திய அடையாளமாகவும் இருக்கும்.***
> *(ஏசாயா 55:11-13)*

தேவனுடைய வார்த்தை வானத்திலிருந்து இறங்கி நமது இருதயத்திற்குள் வந்து நமது மனங்களை நிரப்பி, நமது நினைவுகளுக்கும் வழிகளுக்கும் பதிலாக தேவனுடைய வழிகளுக்கும் நினைவுகளுக்குமாக மாற்றியமைக்கும். இத்தகைய பலன்களை நமக்கு அளிக்கிறது. தேவனுடைய வார்த்தை, அவரது வழிகளையும் நினைவுகளையும் நமது இருதயங்களுக்குள்ளும் வாழ்விலும் கொண்டுவருகிறது. நமது மனங்களில் தேவனுடைய வார்த்தை நிரம்பியிருக்கும்போது தேவனுடைய நினைவுகளை நாம் நினைக்க ஆரம்பிப்போம். நமது முழு வாழ்வும் நினைவுகளும் முற்றிலும் மாறிவிடும்.

இதன் பலன்கள் மிகவும் அழகாக வருணிக்கப்பட்டுள்ளன. சமாதானம், (நீங்கள் சமாதானமாய்க் கொண்டுபோகப்படுவீர்கள்) மகிழ்ச்சி (நீங்கள் மகிழ்ச்சியாய்ப் புறப்பட்டுபோவீர்கள்), துதி (இயற்கை துதி செய்யும், வெளியின் மரங்களெல்லாம் கைகொட்டும்), கனி கொடுத்தல் (முட்செடிக்குப் பதிலாக தேவதாரு விருட்சம் முளைக்கும், காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச்செடி எழும்பும்). தேவனுடைய வசனம் நமது உள்ளத்திற்குள் வருகையில் நாம் அதனை ஏற்றுக்கொண்டு அதைத் தியானம் செய்யும்போது இவைகளெல்லாம் நடைபெறும். நமது சொந்த நினைவுகளும், வழிகளும் முட்செடிகளையும் காஞ்சொறிகளையும் போன்றவைகள். அவைகள் பயனற்றவை, நமக்கு உதவிகரமாக இராது. ஆனால் இவைகளை தேவனுடைய வசனம் எடுத்துப்போட்டு அவைகளுக்குப் பதிலாக தேவதாரு விருட்சத்தையும் மிருதுச் செடியையும் முளைப்பிக்கச் செய்யும்.

நமது நினைவுகளுக்கும் வழிகளுக்கும் பதிலாக தேவனுடைய வழிகளும் நினைவுகளும் வரும்போது இதுவே நம் வாழ்வின் வெற்றிக்குத் திறவுகோல் என்பதை நீங்கள் மனதில் கொள்ள வேண்டுமென்று நான்

உங்களுக்குக் கூற விரும்புகிறேன். தேவனுடைய வார்த்தையை இரவும் பகலும் தியானிக்கும் பழக்கத்தையும் நீங்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தையை நமது உள்ளத்திலும் மனதிலும் ஏற்றுக் கொண்டு தேவனுடைய நினைவுகளைப் போல நாமும் நினைக்கக் கற்றுக்கொள்வதே தேவனுடைய வார்த்தையை தியானிப்பதாகும்.

6

பரிசுத்த ஆவியானவரோடு நட்பு

தேவனுடைய சிறந்தவைகள் உங்களுக்குத் தேவையென்றால் நீங்கள் செய்யவேண்டிய நான்காவது காரியம்: பரிசுத்த ஆவியானவரோடு நீங்கள் நட்பு வைத்துக் கொள்ளவேண்டும். பரிசுத்த ஆவியானவரை ஒரு நபராக நான் குறிப்பிட விரும்புகிறேன். அநேக கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரை வேதாகமத்திற்கடுத்த ஒரு ஆவி போன்றவராகத்தான் நினைக்கின்றனர். பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசுகிறிஸ்து ஆகிய இருவரையுமே ஆள்தத்துவமாக அவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். பிதாவும் குமாரனும் எப்படி ஆள் தத்துவமாக இருக்கிறார்களோ அதே போலத்தான் பரிசுத்த ஆவியானவரும் ஆள்தத்துவமானவர். இது வேதத்தினடிப்படையிலும் வேத வியாக்கியானங்களின் அடிப்படையிலும் நிரூபிக்கப்பட்ட உண்மையாகும்.

அவர் ஒரு புறாவுக்கும் ஒப்பிடப்படுகிறார். புறா ஒரு மென்மையான பயந்த சுபாவமுள்ள பறவையாகும். அதனை சரியானபடி நடத்தாவிட்டால் அது பறந்துபோய்விடும். அதே போலத்தான் பரிசுத்த ஆவியானவரும். சிலவகைகளில் அவர் மிகவும் மென்மையானவர். சரியானபடி நாம் அவருக்குச் செவிகொடாவிட்டால் அவர் நம்மை விட்டுப் போய்விடுவார்.

கீழேக் குறிப்பிடப்பட்டுள்ள வேத பகுதியில் பரிசுத்த ஆவியானவர் ஆள்த்தத்துவமானவர் என்றும் பரிசுத்த ஆவியானவர் நமது வாழ்வில் என்ன செய்வார் என்பது குறித்தும் இயேசு தமது சீடர்களுக்குக் கூறுவதை நாம் காணலாம்.

> ***12 இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்.***
>
> ***13 சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப் பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.***
>
> ***14 அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.***
>
> ***15 பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன். (யோவான் 16:12-15)***

முதலாவதாக, “சத்திய ஆவியாகிய அவர் வரும்போது” என்று பரிசுத்த ஆவியானவரின் ஆள் தத்துவத்தைக் குறித்து இயேசு தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

கிரேக்க மொழியாகிய மூல பதத்தில் இதனைக் குறிப்பிடும்போது மூன்று விதமான பால்கள் இருப்பதாக நாம் காணலாம். ஆண்பால், பெண்பால் மற்றும் இரண்டும் இல்லாத நடுத்தரமான பால் (அஃறிணை) இதனை “அது” என்று குறிப்பிடலாம். கிரேக்க மொழியில் *நியூமா* என்று குறிப்பிடப்படும் “ஆவி” அஃறிணைப் பாலாகும். வேறு வகையாகக் கூறினால் ஆவியைக் குறித்துக் கூறும் போது “அது” என்று குறிப்பிட வேண்டும். ஆனால் இயேசு இந்த இலக்கண விதியையும் மீறி “அது” என்று குறிப்பிடாமல்,

"சத்திய ஆவியாகிய அவர் வரும்போது" என்று கூறுகிறார். நாம் ஒரு ஆள்த்தத்துவமுள்ள ஒருவரோடு தொடர்பு கொள்கிறோம் என்று இயேசு திட்டவட்டமாகக் கூறுகிறார்.

பரிசுத்த ஆவியானவர் நடப்பிக்கும் பலவிதமான காரியங்களைக் குறித்து இயேசு கூறுகிறார். பரலோகத்தில் தான் கேள்விப்படுவனவற்றை நமக்குக் கூறுவதன் மூலம் பரலோகத்தின் தற்போதைய செய்தியை நமக்கு அவர் அறிவிக்கிறார். இனி வருங்காலத்தில் என்ன சம்பவிக்கும் என்பதை அவர் நமக்குத் தெரிவிக்கிறார்.

*பிறகு இயேசு "அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்," (யோவான் **16:14-15**) என்று கூறுகிறார். இது மிகவும் முக்கியம். பிதாவினுடையவைகள் அனைத்தும் குமாரனுக்குரியது. குமாரனுடையதை ஆவியானவர் ஆளுகை செய்கிறார். சுருக்கமாகக் கூறினால், தேவனுடையவைகள் எல்லாவற்றிற்கும் பரிசுத்த ஆவியானவரே நிர்வாகியாக இருக்கிறார். பிதாவினுடையவைகளும் குமாரனுடையவைகளும் இருவருக்கும் பொதுவானவை. ஆனால் பிதாவினுடையவைகளையும் குமாரனுடையவைகளையும் எடுத்து நமக்கு அளிப்பவர் பரிசுத்த ஆவியானவரே. சட்டபூர்வமாகவும் கொள்கை ரீதியாகவும் நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இருக்கலாம். ஆனால் உங்களுக்குப் பரிசுத்த ஆவியானவரோடு தொடர்பு இல்லாமல் இருந்தால் ஏழ்மையான, பற்றாக்குறை மிகுந்த ஒரு வாழ்க்கைதான் வாழ்வீர்கள். ஏனெனில் பரிசுத்த ஆவியானவரே தேவனுடைய முழு சொத்துக்கும் அதிகாரியாக உள்ளார். மறுபடியும் இயேசு தமது சீஷரை நோக்கி இவ்வாறு கூறுகிறார்.*

15நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.

16நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.

17உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.

18நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன். (யோவான் 14:15-18)

இரண்டு முக்கியமான காரியங்களைக் கவனியுங்கள்: முதலாவது பரிசுத்த ஆவியானவர் மூலமாக இயேசு நம்மிடத்தில் வருகிறார். இரண்டாவதாக பரிசுத்த ஆவியானவரோடு சரியான தொடர்பு நமக்கு இல்லாவிட்டால், நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருந்தாலும் நாம் அநாதைகளைப்போலவே இருப்போம். பரிசுத்த ஆவியானவரே நாம் உண்மையான தேவனுடைய பிள்ளைகளாக இருக்க நமக்கு உதவி செய்கிறார். ரோமர் 8:14ல் பவுல் இதனைத் தெளிவாகக் குறிப்பிடுகிறார். "மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ (இது ஒரு தொடர் நிகழ்ச்சி. பரிசுத்த ஆவியானவராலே யாரெல்லாம் தொடர்ந்து நடத்தப்படுகிறார்களோ) அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்."

"புத்திரர்" என்று இங்கே குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தை குழந்தைகளையோ பிள்ளைகளையோ குறிக்காமல் முதிர்ச்சியடைந்தவர்களைக் குறிப்பதாக உள்ளது. பரிசுத்த ஆவியில் நாம் பிறக்கும்போது குழந்தைகளாக இருக்கிறோம். ஆனால் நாம் முதிர்ச்சியடைய வேண்டுமானால் பரிசுத்த ஆவியானவரோடு தொடர்ச்சியான உறவு நமக்கு இருக்க

வேண்டும். நாம் தொடர்ந்து பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட வேண்டும். இதைத்தான் பவுல் கூறுகிறார்: ''மேலும் எங்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ (தொடர்ந்து) அவர்கள் (முதிர்ச்சியடைந்த) தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்." எனவே நீங்கள் தேவனுடைய பிள்ளையாக மாற வேண்டுமானால் பரிசுத்த ஆவியினால் நீங்கள் பிறக்க வேண்டும். நீங்கள் முதிர்ச்யிடைந்த தேவனுடைய பிள்ளைகளாக வேண்டுமென்றால் பரிசுத்த ஆவியானவரோடு தினமும் தொடர்ச்சியான உறவு உங்களுக்கு இருக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவரால் நீங்கள் நடத்தப்பட வேண்டும்.

இன்றைக்கு சபைகளில் நான் அநேகம் தேவனால் பிறந்த மக்களைக் காண்கிறேன். ஆனால் தேவனால் நடத்தப்படும் மக்களைக் காண்பது அரிதாக உள்ளது. மறு பிறப்பைப்பற்றி அறிந்திருக்கிறீர்கள். ஆனால் பரிசுத்த ஆவியானவரோடு தொடர்ச்சியான உறவைப் பற்றி அவர்கள் அறிந்து கொள்வதில்லை. அத்தகைய உறவு மட்டுமே அவர்களை முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களாக மாற்ற முடியும். எனவே தேவனுடைய சிறந்தவைகள் உங்களுக்குத் தேவையெனில் பரிசுத்த ஆவியானவரை ஒரு நபராக அறிந்து கொண்டு அவரோடு தொடர்ச்சியான உறவு வைத்துக் கொள்ள நீங்கள் பழகிக் கொள்ள வேண்டும். அவர் உங்களுடைய தனிப்பட்ட வழிகாட்டியாகவும் தேவனுடைய ராஜ்யத்தின் பொக்கிஷங்களுக்கு நிர்வாகியாகவும் இருக்கிறார். அவர் மட்டுமே இவற்றை உங்களுக்கு அனுபவத்தின் மூலமாக கற்றுத்தருவார்.

பரிசுத்த ஆவியானவரோடு உள்ள நமது உறவில் மற்றும் ஒரு முக்கியமான அம்சம் உள்ளது. நாம் அவருக்கு உரிய மதிப்பைத் தர வேண்டும். அவருக்கு நாம் மிகவும் உணர்ச்சி பூர்வமாக ஒத்துழைப்பவர்களாக இருக்க

வேண்டும். எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் பவுல் இதைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிடுகிறார்:

> **[30]அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்தஆவியைத் துக்கக்கப்படுத்தாதிருங்கள்.**
>
> **[31]சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. (எபேசியர் 4:30-31)**

ஆரம்பத்தில், பரிசுத்த ஆவியானவர் பயந்த சுபாவமுள்ள ஒரு புறாவுக்கு ஒப்பிடப்பட்டுள்ளார் என்பதாக நாம் பார்த்தோம். எனவே, பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்தாதிருங்கள் என்று பவுல் கூறும் போது "அந்த புறாவைப் பயப்படுத்தித் துரத்தி விடாதிருங்கள்" என்று அர்த்தம் கொள்ளுமாறு அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார். புறாவைப் பயப்படுத்தக் கூடிய காரியங்களையும் குறிப்பிடுகிறார்: கசப்பு, கோபம், மூர்க்கம், கூக்குரல், தூஷணம், துர்க்குணம். அந்த அழகான உணர்ச்சி மிகுந்த புறாவைப் பயப்படுத்தித் துரத்திவிடாதபடி நாம் மிகவும் கவனமாக இருந்து இத்தகைய செயல்களில் ஈடுபடாமல் இருத்தல் வேண்டும். ஏனெனில் அவர் மட்டுமே நமது சுதந்திரத்தை தேவனிடத்திலிருந்து நமக்குப் பெற்றுத் தருவதோடு தேவனுடைய முதிர்ச்சியடைந்த புத்திரராய் வாழவும் நமக்கு உதவி செய்கிறார்.

7
செவி கொடுத்தலும் கீழ்ப்படிதலும்

தேவனுடைய சிறந்தவைகள் உங்களுக்குத் தேவையென்றால் நீங்கள் செய்ய வேண்டிய ஐந்தாவது காரியம் தேவனுடைய வார்த்தைக்குச் செவி கொடுத்தலும் கீழ்ப்படிதலுமாகும்.

இது நமக்குத் தானாய் வரக்கூடிய காரியமல்ல. ஒரு வகையில் தேவனுடைய சத்தத்திற்கு செவி கொடுக்க மறுப்பது என்பது பழைய ஆதாமின் சுபாவமாகும். இயற்கையிலேயே பழைய மாம்ச சுபாவம். தேவனுடைய சத்தத்திற்கு செவி கொடுக்க ஒத்துழைக்காது. மிகவும் கவனமாக இருந்து நல்ல பயிற்சிக்குப் பின்பே இதனை நாம் பழக்கத்திற்குக் கொண்டு வர முடியும். நமது கவனத்தை திசை திருப்ப இந்த உலகத்தில் பலவிதமான சத்தங்கள் நம்மை மேற்கொள்ளக்கூடும். இருப்பினும் இவற்றின் மத்தியில் அளவு கடந்த ஞானத்தோடும் அதிகாரத்தோடும் தேவனுடைய அமைதலான மெல்லிய சத்தம் நமது காதுகளில் தொனிக்கும். இந்த தேவனுடைய சத்தமே நாம் நல்ல நிலையில் இருப்பதற்குத் திறவு கோலாக அமைகிறது.

தேவனுடைய சத்தத்திற்குச் செவி கொடுப்பதற்குத் தேவையான பயிற்சியைக் குறித்து தேவனுடைய வார்த்தைகளில் அதிகமாகக் கூறப்பட்டுள்ளது. தேவனோடு உள்ள உறவில் நமக்குக் கிடைத்துள்ள

வெற்றியும் அவரோடு நாம் நடந்து செல்லும் நிலையும் நாம் தேவனுடைய வார்த்தைக்குச் செவிகொடுப்பதற்கு உதவிகரமாக அமைகின்றன.

இது குறித்து சில உதாரணங்களை நான் கூற விரும்புகிறேன். முதலாவது தேவனிடத்திலிருந்து நாம் உடல் நலத்தையும் நோயிலிருந்து நிவாரணத்தையும் பெற்றுக் கொள்வதைக் குறித்துக் காண்போம். தேவனுடைய சத்தத்தைக் கேட்பதன் மூலமே நாம் நல்ல உடல் நலத்தையும் நோயிலிருந்து சுகத்தையும் பெற்றுக் கொள்ள முடியும் என்பதாக வேத வாக்கியங்கள் கூறுகின்றன. இஸ்ரவேல் மக்களோடு மோசே பேசுகையில் இது குறித்து கூறுவதாக யாத்திராகமம் **15:26**ல் நாம் வாசிக்கிறோம்.

> ***26 நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார். (யாத்திராகமம் 15:26)***

எபிரெயு மொழியில் "கேட்கக்கூடுமானால் உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கேள்" என்று கூறப்பட்டுள்ளது. இது மிகவும் அழுத்தம் திருத்தமாக கூறும் முறையாகும். தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்கு மிகவும் கவனமாகக் கேட்பதை இது குறிக்கிறது. இதனால் தேவன் உங்களுடைய தனிப்பட்ட பரிகாரியாக செயல்படுகிறார். இதற்கு அடிப்படைத் தேவையான காரியம்: தேவனுடைய சத்தத்திற்கு மிகவும் கவனமாகச் செவிகொடுப்பதாகும்.

தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு திறவுகோலாக

அமைவது தேவனுடைய வார்த்தையைக் கேட்பதும் அதற்குக் கீழ்ப்படிவதுமாகும் என்று உபாகமம் 28ம் அதிகாரத்தில் மோசே கூறுவதாக நாம் வாசிக்கிறோம்.

> ***1இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவி கொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்.***
>
> ***2நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்குச் செவிகொடுக்கும்போது, இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன்மேல் வந்து உனக்குப் பலிக்கும். (உபாகமம் 28:1-2)***

தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு முக்கியமான நிபந்தனை: தேவனுடைய வார்த்தையைக் கேட்பதும் அதற்குக் கீழ்ப்படிவதுமாகும் என்று மோசே இரண்டு முறை கூறுவதைக் கவனியுங்கள்.

"உன் தேவனாகிய கர்த்தருக்குச் செவிகொடுக்கும் போது இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன் மேல் வந்து உனக்குப் பலிக்கும்" என்று கூறுகிறார். ஆசீர்வாதங்களைத் தேடி நீங்கள் ஓட வேண்டியதில்லை. தேவனுடைய சத்தத்தைக் கேட்கும் பழக்கத்தை நீங்கள் ஏற்படுத்திக் கொண்டால் ஆசீர்வாதங்கள் உங்களைத் தேடி வரும். மாறாக 15ஆம் வசனத்திற்குப் பிறகு தேவனுடைய வசனத்திற்கு நாம் செவிகொடுக்காத போது ஆசீர்வாதத்திற்குப் பதிலாக சாபம் வந்து சேரும் என்று நாம் வாசிக்கிறோம்.

> ***15இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைகளின்படியும் கட்டளைகளின்படியும் நடக்கக் கவனமாயிருக்கிறதற்கு,***

அவர் சத்தத்திற்குச் செவிகொடாதேபோவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்குப் பலிக்கும். (உபா. 28:15)

எனவே தேவனுடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிய மறுக்கும்போது நம்மீது சாபம் வரும். கேட்டுக் கீழ்ப்படியும் போது எல்லாவித ஆசீர்வாதமும் வரும். இதுதான் ஆசீர்வாதத்திற்கும் சாபத்திற்கும் உள்ள வித்தியாசம். நாம் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படியலாம் அல்லது அவருடைய வார்த்தையைக் கேட்கவும் கீழ்ப்படியவும் நாம் மறுக்கலாம்.

எரேமியா 7ஆம் அதிகாரத்தில் இஸ்ரவேல் மக்கள் அவருடைய பிள்ளைகளாக இருப்பதற்கான முக்கியமான நிபந்தனையைக் கூறுகிறார்.

22நான் உங்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவந்த நாளிலே, தகனபலியைக்குறித்தும், மற்றப் பலிகளைக்குறித்தும் நான் அவர்களோடே பேசினதையும் கட்டளையிட்டதையும்பார்க்கிலும்,

23என் வாக்குக்குச் செவிகொடுங்கள், அப்பொழுது நான் உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்; நான் உங்களுக்குக் கற்பிக்கும் எல்லா வழியிலும், நீங்கள் உங்களுக்கு நன்மையுண்டாகும்படிக்கு நடவுங்கள் என்கிற விசேஷத்தையே அவர்களுக்குச் சொல்லிக் கட்டளையிட்டேன். (எரேமியா 7:22, 23)

ஆலயத்தைக் குறித்தும், ஆசாரிய ஊழியத்தைக் குறித்தும், பலியைக் குறித்தும் கூறப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் இரண்டாம் பட்சமானதாக ஆண்டவர் இங்குக் குறிப்பிடுகிறார். எகிப்து தேசத்திலிருந்து தம்முடைய பிள்ளைகளை விடுதலை செய்து வெளியே கொண்டுவந்தபோது அவர்களிடம் தேவன் பலியையோ,

காணிக்கையையோ அவர் எதிர்பார்க்கவில்லை. ஆனால், அவர்கள் அவருடைய சத்தத்திற்குச் செவி கொடுக்க வேண்டுமென்றும் கீழ்ப்படிய வேண்டுமென்றும் விரும்பினார். கீழ்ப்படிந்து பின் பலி செலுத்தும்போது அது சிறந்ததாக தேவன் கருதுகிறார். ஆனால் பலியை மட்டும் செலுத்துவதால் அவருடைய பிள்ளைகள் ஆக முடியாது. தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படியும் போது மட்டுமே அவர்கள் அவருடைய பிள்ளைகளாக முடியும்.

தேவனுடைய பிள்ளைகளாக இருப்பதற்கான தகுதியைப் பற்றிச் சுருக்கமாக வேதத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: "என் வாக்குக்குச் செவி கொடுங்கள், அப்பொழுது நான் உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்; (எரேமியா 7:23)

புதிய ஏற்பாட்டிலும் இந்த நிபந்தனை மாறவில்லை. இயேசு கிறிஸ்துவுக்கு பிள்ளைகளாயிருப்பதற்கும் இதே நிபந்தனைதான். இயேசு இதனைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார்: "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன் அவைகள் எனக்குப் பின் செல்லுகிறது." (யோ. 10:27)

யார் ''என் ஆடுகள்?'' அவர்கள் இயேசுவின் பிள்ளைகள், அவர்கள் கத்தோலிக்கரா, புரோட்டஸ்டேன்ட் சபைகளைச் சேர்ந்தவர்களோ, பாப்டிஸ்டு மற்றும் மெத்தடிஸ்டு சபைகளைச் சேர்ந்தவர்களோ அல்லது வேறு எந்த சபைப்பிரிவைச் சார்ந்தவர்களாகவோ இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. அவருடைய சத்தத்தைக் கேட்டு அவரைப் பின்பற்றுபவர்களே இயேசுவுக்கு சொந்தமானவர்கள். அவருடைய சத்தத்தைக் கேட்கவில்லை என்றால் நீங்கள் அவரைப் பின்பற்ற முடியாது. இதுதான் தேவனுடைய பிள்ளைகளுக்கான அடையாளம்: அவர்கள் அவரது சத்தத்தைக் கேட்பார்கள்.

உடனடியாகக் கீழ்ப்படியும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல்

தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதைக் குறித்த இரண்டு எச்சரிப்புகளைக் கூற விரும்புகிறேன். முதலாவதாக உடனடியாகக் கீழ்ப்படியும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். உடனடியாக என்கிற இந்த வார்த்தையை நான் முக்கியப்படுத்திக் கூற விரும்புகிறேன். இதற்கு வேதாகமத்தில் ஆபிரகாமை ஒரு உதாரணமாகக் கூறலாம். எப்பொழுதுதெல்லாம் தேவனுடைய வார்த்தையைக் கேட்டாரோ அப்பொழுதெல்லாம் உடனடியாக அவர் கீழ்ப்படிந்தார். இதோ ஒரு உதாரணம்:

> ***[2]அப்பொழுது அவர்: உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக் கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்.***
>
> ***[3]ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, தன் கழுதையின்மேல் சேணங்கட்டி, தன் வேலைக்காரரில் இரண்டுபேரையும் தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக்கொண்டு, தகனபலிக்குக் கட்டைகளையும் பிளந்து கொண்டு, தேவன் தனக்குக் குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப்போனான். (ஆதியாகமம் 22:2, 3)***

அடுத்த நாள் அதிகாலமே எழுந்து ஆபிரகாம் தேவன் தனக்குக் கட்டளையிட்டபடி கீழ்ப்படிந்து புறப்படுகிறதைக் கவனியுங்கள். நான் கவனித்த காரியங்களிலிருந்தும் எனது சொந்த அனுபவத்திலுமிருந்தும் கண்ட காரியம்: நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதற்குத் தாமதிக்கும்போது அந்தக் காரியம் நடப்பது கடினமாகிறது. கர்த்தருக்குக்

கீழ்ப்படிவதில் சுலபமான வழி என்னவென்றால், முதல் முறை அவர் பேசும்போதே உடனடியாகக் கீழ்ப்படிவதுதான்.

*ஒரு எதிர்மறையான அனுபவத்தைக் காண்போம். தேவனுக்குக் கீழ்ப்படிவதில் தாமதப்படுத்தியதற்கு உதாரணம்: லோத்தின் மனைவி சோதோமைவிட்டு வேளியே வர விரும்பினாள். ஆனால் மெதுவாக வந்தாள். பின்னால் திரும்பிப் பார்த்து உப்புத்தூண் ஆனாள். இயேசுவின் போதனைகளில் மிகவும் சுருக்கமான வசனங்களில் ஒன்று லூக்கா **17:32:** "லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்." வேறு வகையாகக் கூறினால் கீழ்ப்படிவதற்குத் தாமதிக்காதீர்கள். பிறகு அந்தக் காரியம் கை நழுவிப் போய்விடும்.*

புத்தியீனமானவர்களாகக் காணப்பட ஆயத்தமாயிருங்கள்

*நான் உங்களுக்குக் கூறும் இரண்டாவது எச்சரிக்கை: நீங்கள் மற்ற மக்களுக்கு முன்பாகப் புத்தியீனமானவர்களாகத் தென்பட ஆயத்தமாயிருங்கள். **1** கொரிந்தியர் **1:25**ல் பவுல் இவ்வாறு கூறுகிறார்: "இந்தப்படி, தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது; தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது." மனுஷர் எதை ஞானமான காரியம் என்று எண்ணுகிறார்களோ அதை நாம் நம்புவோமென்றால் நாம் கர்த்தரை இழந்துவிடுவோம். இதே கொரிந்தியர் நிரூபத்தில் பவுல் இவ்வாறு அழுத்தமாகக் கூறுகிறார்:*

> ***[18]ஒருவனும் தன்னைத்தானே வஞ்சியாதிருப்பானாக; இவ்வுலகத்திலே உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன்***

ஞானியாகும்படிக்குப் பைத்தியக்காரனாகக்கடவன். (1 கொரிந்தியர் 3:18)

*நீங்கள் உண்மையாகவே ஞானியாக வேண்டுமென்றால் நீங்கள் முதலில் பைத்தியமாக வேண்டும். இது அநேகருக்கு அதிர்ச்சியாக இருக்கும். ஆனால் வேதத்தில் இதற்கு அநேக உதாரணங்கள் உண்டு. ஒருவருக்கும் மழை என்றால் என்ன என்றே தெரியாத காலத்தில் நோவா காய்ந்த தரையில் பேழையைக் கட்டினார். அது பைத்தியமாகத் தோன்றியது. ஆனால் அது தேவ ஞானம். சீரிய படைத்தலைவனாகிய நாகமான் யோர்தான் நதியில் இறங்கி தனது குஷ்டரோகம் நிறைந்த உடலை நதியில் ஏழுதரம் முழுக்கி எடுக்கிறான். இது எவ்வளவு முட்டாள்தனம்! ஆனால் அவன் பரிபூரண சுகம் பெறுகிறான். பிறகு யோவான் **9**ஆம் அதிகாரத்தில் பிறவிக் குருடனை நாம் பார்க்கிறோம். இயேசு சேற்றை அவன் கண்களில் பூசி சீலோவாம் குளத்தில் சென்று கழுவுமாறு கூறுகிறார். சேறு பூசிய கண்களோடு சீலோவாம் குளத்தை நோக்கி அவன் செல்லும்போது எவ்வளவு பைத்தியகாரத்தனமாகத் தோன்றியிருக்கும்! ஆனால் அவன் சுகமாக்கப்பட்டான்.*

கிழக்கு ஆப்பிரிக்காவில் நான் போதித்துக் கொண்டிருந்தபோது என் வாழ்வில் ஒரு சம்பவம் நடந்தது. ஏழு நாட்கள் தொடர்ந்து கூட்டங்கள் நடைபெற்றன. ஒவ்வொரு நாள் கூட்டத்தின் கடைசியிலும் “யாருக்காவது சுகம் வேண்டுமென்றால் நீங்கள் எழுந்து நில்லுங்கள் உங்களுக்காக நான் ஜெபிப்பேன்” என்று கூறினேன். ஒரு பையன் ஒரு குருடான பெண்ணை ஜெபிக்கும்படி அழைத்து வந்தான். ஆறு நாட்களும் தொடர்ந்து அந்தப் பெண்ணுக்காக ஜெபித்தேன். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. அதைக் குறித்து எனக்கு மிகவும் சங்கடமாயிருந்தது. ஏழாவது நாளும் அந்தப் பெண் ஜெபிக்கும்படி வந்திருந்தார். “நான் உனது சுகத்திற்காக

ஜெபிக்க வேண்டுமென்றால் எழுந்து நில்'' என்று கூறினேன். அவள் எழுந்து நின்றாள், நான் அவளுக்காக ஜெபித்தேன். "இந்தப் பெண்ணுக்கு என்ன நடக்கும்" என்று என்னால் ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை. என் கண்களை திறந்து பார்த்தபோது அந்தப் பெண் தன் கண்கள் சுகமானதற்கு அடையாளமாக அந்தப் பையனின் உதவியின்றி தனியாக நடந்து சென்றதை நான் கண்டேன். சுகமடைவதற்கு முன்பாக அந்தப் பெண் முதலாவது பைத்தியமாவதற்குத் தன்னை விரும்பி ஒப்படைத்தாள்.

8

இரண்டு கேட்கும் சோதனைகள்

தேவனுடைய சிறந்தவைகள் தேவையென்றால் நீங்கள் செய்ய வேண்டிய ஆறாவது காரியம்: "நீங்கள் கேட்கும் காரியங்களைக் குறித்து கவனமாய் இருக்க வேண்டும்." உண்மையில் இது சென்ற அத்தியாயத்தில் நாம் தேவனுடைய சத்தத்தைக் கேட்பதும் கீழ்ப்படிவதும் என்பதைக் குறித்துக் கவனித்ததற்குச் சம்பந்தப்பட்டதாகும். கேட்பதைக் குறித்த காரியங்களைக் கவனிப்போம்.

பழைய ஏற்பாடு முதல் புதிய ஏற்பாடு முடிய வேதத்தில் தேவனுடைய பிள்ளைகளாவதற்குத் தேவையான காரியம் தேவனுடைய சத்தத்தைக் கேட்பதும் கீழ்ப்படிவதுமாகும் என்று ஏற்கெனவே நான் குறிப்பிட்டுள்ளேன். பழைய ஏற்பாட்டில் தேவன் இஸ்ரவேல் மக்களை நோக்கி: "என் வாக்குக்குச் செவி கொடுங்கள், அப்பொழுது நான் உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்;" (எரேமியா **7:23**) என்று கூறுகிறார். புதிய ஏற்பாட்டில் இயேசு: "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்கு பின்செல்லுகிறது." (யோவான் **10:27**) என்று கூறுகிறார். இந்த நிலைமை எப்பொழுதும் எக்காலத்தும் மாறாது.

தேவனுடைய வார்த்தையைக் கேட்பது குறித்து மேலும் சில காரியங்களை நாம் பார்க்கலாம். இரண்டு வெவ்வேறு

காரியங்களை இயேசு சுவிசேஷங்களில் கூறியதாக நாம் வாசிக்கிறோம்: "கேட்கிறதை கவனியுங்கள்", "கேட்கிற விதத்தைக் கவனியுங்கள்." இந்த இரண்டு காரியங்களும் எதைப்பற்றிக் கூறுகிறது என்பதைக் குறித்து நாம் காண்போம்.

எதைக் கேட்கிறீர்கள்

*மாற்கு **4:23-25**ல் "எதைக் கேட்கிறீர்கள்" என்பதைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது. "கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ளவனாயிருந்தால் கேட்கக்கடவன் என்று இயேசு கூறுகிறார்." "கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ளவனாயிருந்தால் கேட்கக்கடவன்'' என்பதற்கு இவ்வாறு அர்த்தம் கொள்ளலாம் என்று நான் நினைக்கிறேன்: தேவனுடைய சத்தத்தைக் கேட்பதற்கு ஏற்றவாறு நாம் பிறக்கும்போதே சூழ்நிலை இயற்கையாகவே ஏற்படுவதில்லை என்று நான் ஏற்கெனவே கூறியுள்ளேன். பரிசுத்த ஆவியானவர் அதனை நமக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். இதனை நாம் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.*

இயேசு இவ்வாறு கூறுகிறார்:

> ***24 பின்னும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள். எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்; கேட்கிற உங்களுக்கு அதிகம் கொடுக்கப்படும்.***
>
> ***25 உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவனெவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும் என்றார். (மாற்கு 4:24, 25)***

இங்கே இயேசு மூன்று காரியங்களைக் கூறுகிறார். முதலாவது, அடிப்படையில் தேவையான காரியம்: கேட்பதற்கு நமக்குத் திறமை வேண்டும். அதாவது

தேவனுடைய வார்த்தையைக் கேட்கும் சக்தி நமக்குத் தேவை. "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்."

இரண்டாவது, சரியான முறையில் கேட்கும் போது (நல்ல காரியங்களைக் கேட்கையில்) நாம் நமது ஆவிக்குரிய ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்கிறோம். "உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்" என்று இயேசு கூறுகிறார். எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும். தேவனுடைய வார்த்தைக்கு எவ்வளவு அதிகமாக செவிகொடுக்க உங்களை ஒப்புக்கொடுக்கிறீர்களோ அவ்வளவுக்கதிகமாக தேவனும் தம்மை உங்களுக்கு அளிப்பார். நாம் கேட்கும் அளவு எவ்வளவோ அந்த அளவுக்கு தேவன் தம்மை நமக்கு வெளிப்படுத்துவார்.

மூன்றாவது காரியம், தவறான முறையில் கேட்பதால் (அல்லது கேட்கவில்லை என்றால்), நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை குறைவுபட்டுப் போவதுமல்லாமல் கடைசியில் ஆவிக்குரிய பிரகாரமாக எல்லாவற்றையும் நாம் இழந்துவிடுவோம். "உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும். இல்லாதவனெவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும்" என்று இயேசு கூறுகிறார் (மாற்கு **4:25**). ஆவிக்குரிய வாழ்க்கையில் கடந்த நாட்களில் உயர்ந்திருந்த அநேகர் தற்போது எல்லாவற்றையும் இழந்த நிலையில் இருப்பதை எனது அனுபவத்தில் நான் கண்டிருக்கிறேன். அவர்கள் எல்லாவற்றையும் இழந்ததற்குக் காரணம் என்ன? அவர்கள் கேட்கும் திறமையை (வளர்த்துக் கொள்ளாமல் விட்டுவிட்டார்கள்) அல்லது இழந்து விட்டார்கள். அவர்கள் தவறான காரியத்தைக் கேட்க ஆரம்பித்து விட்டார்கள். தேவனை மறந்து விட்டுத் தவறான காரியங்களுக்கும், எதிர்மறையான காரியங்களுக்கும் தங்களை ஒப்புக்கொடுத்ததனால் ஆவிக்குரிய காரியங்களை முற்றிலுமாக இழந்து விட்டார்கள்.

நீங்கள் எப்படிக் கேட்கிறீர்கள்

கேட்பதற்கு எப்படி நாம் கவனமாக இருக்க வேண்டுமென்று இயேசு இவ்வாறு கூறுகிறார்.

> ***18 ஆதலால் நீங்கள் கேட்கிற விதத்தைக்குறித்துக் கவனியுங்கள்; உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவனெவனோ அவன் தனக்குண்டென்று நினைக்கிறதும் அவனிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் என்றார். (லூக்கா 8:18)***

மீண்டும் இதே தேவ எச்சரிப்பை நாம் காண்கிறோம். நாம் எவ்விதமாக தேவ சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறோமோ அந்த விதமாகவே தேவனும் தம்மை நமக்கு வெளிப்படுத்துவார். தவறான சத்தத்திற்கு செவி கொடுப்பதன் மூலமாய் தேவ சத்தத்திற்கு நம்மை அடைத்துக் கொள்ளுவோமென்றால் நாம் எல்லாவற்றையும் இழந்துவிடுவோம். இயேசு மீண்டும் இதே காரியத்தைக் கூறுகிறார். ஆவிக்குரிய நிலை உயர்வதோ தாழ்வதோ நாம் எதைக் கேட்கிறோம் எப்படிக் கேட்கிறோம் என்பதைப் பொருத்தது.

*எப்படிக் கேட்பது என்பது குறித்த மற்றுமொரு காரியத்தை நான் உங்களுக்குக் கூற விரும்புகிறேன்: எதை ஏற்றுக் கொள்வது எதை நிராகரிப்பது என்பதை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். "வாயானது போஜனத்தை ருசி பார்க்கிறதுபோல, செவியானது வார்த்தைகளைச் சோதித்துப்பார்க்கிறதல்லவா?" என்று யோபு **12:11**இல் இது குறித்து அழகாகக் கூறப்பட்டுள்ளது.*

நாம் சாப்பிடும்போது வாய் என்ன வேலை செய்கிறதோ அதே போன்ற பணியைத்தான் நாம் கேட்கும்போதும் நமது செவிகள் செய்கின்றன. கசப்பான அல்லது சுவையற்ற பண்டத்தை நமது வாயில் போடுவோமென்றால் அதனை நாம் விழுங்காமல் துப்பி விடுகிறோம். இதே போலத்தான்

நாம் கேட்கும் காரியத்திலும் செயல்பட வேண்டுமென்று யோபில் கூறப்பட்ட வசனம் நமக்கு தெளிவு படுத்துகிறது. எதிர்மறையான, கசப்பான, நமது விசுவாசத்தைக் குலைக்கக் கூடிய காரியத்தை நாம் கேட்கும்போது அதனை நாம் நிராகரிக்க வேண்டும்.

உணவை நாக்கு ருசி பார்ப்பது போல் காதும் வார்த்தைகளை ருசி பார்க்கிறது. "மீனைச் சாப்பிடும்போது (அதாவது மீனைச் சாப்பிட்டுவிட்டு முள்ளை துப்பிவிடுவதுபோல) எப்படி சாப்பிடுகிறீர்களோ அப்படியே ஒரு பிரசங்கியார் பிரசங்கம் செய்யும் போது (அவர் பேசினாலும் சரி) கவனமாகக் கேட்க வேண்டும் என்று நான் அடிக்கடி கூறுவதுண்டு. முள்ளைச் சாப்பிட்டால் அதற்காக நீங்கள் தான் வருத்தப்பட வேண்டும்." ஆதலால் நீங்கள் கேட்கிற விதத்தைக் குறித்து கவனியுங்கள் என்று இயேசு கூறியதன் அர்த்தத்தை இந்த சாதாரண உவமையைக் கொண்டு நான் விளக்கியுள்ளேன். நல்ல காரியங்களை எடுத்துக் கொண்டு கெட்டனவற்றை வெளியே விட்டுவிட வேண்டும். கெட்ட காரியங்களை உள்ளேவிட்டால் அதற்காக நீங்கள் வருத்தப்பட வேண்டி வரும்.

விசுவாசம் வருகிறது

*கேட்பதைக் குறித்து மற்றுமொரு காரியம் ரோமர் **10:17**இல் கூறப்பட்டுள்ளது. "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்."*

இது ஒரு மிகவும் முக்கியமான உண்மை: "கேள்வியினாலே விசுவாசம் வரும்" விசுவாசம் இல்லாமல் நீங்கள் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் விசுவாசமின்றி இருந்த நாட்களை நான் நினைவுகூறுகிறேன். ஓர் ஆண்டு காலம் சுகவீனமாக மருத்துவமனையில் மருத்துவர்களால் சுகமாக்கக் கூடாமல் படுத்திருந்தேன்.

நம்பிக்கை இழந்த நிலையில் இருந்தேன். ஆனால் ஒரு நாள் பரிசுத்த ஆவியானவர் இந்த வசனத்தை என் உள்ளத்தில் வெளிப்படுத்தினார்: "விசுவாசம் வரும்" உங்களுக்கு விசுவாசம் இல்லையென்றால் அதனை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும். எப்படி நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும்? கேட்பதன் மூலமாக, எதைக் கேட்பதால்? தேவனுடைய வார்த்தையைக் கேட்பதன் மூலமாக, நான் தேவனுடைய வார்த்தையைக் கேட்க ஆரம்பித்தேன். அதன் மூலமாக விசுவாசம் வந்தது. கடைசியாக மருத்துவமனையிலிருந்து வெளியே வந்தேன். நான் சுகம் பெற்றேன். மருத்துவத்தின் மூலமாக அல்ல. தேவனுடைய வார்த்தையைக் கேட்பதன் மூலமாக. தேவனுடைய இயற்கைக்கு மாறான வல்லமையினால் சுகம் பெற்றேன்.

*நான் ஒரு முக்கியமான காரியத்தைக் கூற விரும்புகிறேன்: கேட்பதன் மூலமாக விசுவாசம் வருவது மட்டுமல்ல, கேட்பதன் மூலமாக அவிசுவாசம் வரும். இதைக் குறித்து பவுல் **2** தீமோத்தேயு **2:16-18**ல் கூறுகிறார். எப்படி ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ வேண்டுமென்று பவுல் தீமோத்தேயுவுக்கு அறிவுரை கூறுகிறார்.*

***16** சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகியிரு; அவைகளால் (கள்ளப்போதகர்களான) அவர்கள் அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள்;*

***17** அவர்களுடைய வார்த்தை அரிபிளவையைப்போலப் படரும்; இமெநேயும் பிலேத்தும் அப்படிப்பட்டவர்கள்;*

***18** அவர்கள் சத்தியத்தை விட்டு விலகி, உயிர்த்தெழுதல் நடந்தாயிற்றென்று சொல்லி, சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடுகிறார்கள்.*

(2 தீமோத்தேயு 2:16-18)

உங்களுடைய விசுவாசத்தைக் காத்துக் கொள்ள நீங்கள் விரும்பினால் தேவனுக்கு விரோதமான

சம்பாஷனைகளிலோ இமெநேயும் பிலேத்தும் போன்றவர்களின் கள்ளப் போதனைகளிலோ நீங்கள் சம்பந்தங்கலக்கக்கூடாது. இவைகளைத் தொடர்ந்து நீங்கள் கேட்பீர்களானால், அவைகள் உங்கள் இருதயத்திலும் மனதிலும் புகுந்து, புற்று நோய் எவ்வாறு நல்ல சதைகளை அரித்துப் போடுகிறதோ அதைப் போல உங்கள் நல்ல விசுவாசத்தைக் கெடுத்துப் போடும். கேட்க வேண்டிய காரியங்களிலும் கேட்கும் முறையிலும் சரியான முறையைப் பின்பற்றப் பழகிக் கொள்ளுங்கள். தேவனுடைய வசனத்தைக் கேட்பதன் மூலம் விசுவாசம் வரும்.

நீங்கள் சரியான நண்பர்களையும் உங்களோடு தொடர்பு கொள்ளும் நல்ல மக்களையும் தெரிந்து கொள்ளுங்கள். ஏனெனில் அவர்கள் கூறும் காரியங்களுக்குத்தான் நீங்கள் செவி சாய்ப்பீர்கள். உங்கள் விசுவாசத்தை குலைப்பவர்களைவிட உங்களுக்கு நல்ல காரியங்களை எடுத்துச் சொல்லுபவர்கள் கூறுவதைத்தான் நீங்கள் கேட்க விரும்புவீர்கள்.

14 அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?
(2 கொரிந்தியர் 6:14)

11 கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்.

12 அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்கிறதே. (எபே. 5:11, 12)

கெட்ட நடத்தையும் பேச்சும் கொண்ட மக்களோடு உறவு வைத்துக் கொள்ளாதீர்கள். அது உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையைப் பாழாக்கிவிடும். இதற்கு நேர்மாறாக பவுல் தீமோத்தேயுவுக்கு கீழ்க்கண்டவாறு

கூறுகிறார்.

> [22]***அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு. (2 தீமோத்தேயு 2:22)***

வேறுவகையாகக் கூறினால், நீங்கள் சரியான காரியத்தை நாடித் தேடுவீர்களானால் சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தேடுகிறவர்களோடும் நல்ல மக்களோடும் சேர்ந்து அதை தேட வேண்டும்.

9

சரியான முக்கியத்துவங்கள்

தேவனுடைய சிறந்தவைகள் தேவையென்றால். . ." என்ற இந்த வாக்கியத்தை முடிக்கும் ஏழாவது வழி நிலையற்ற காரியங்களைக் காட்டிலும் நித்தியத்தைக் குறித்த காரியத்தில் அதிகக் கரிசனையுள்ளவர்களாக நாம் இருக்க வேண்டும் என்பதாகும்.

நிலையற்ற காரியங்களையும் நித்தியமான காரியங்களையும் ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ள வேத பகுதி ஒன்று உண்டு.

> ***17 மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.***
>
> ***18 ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்.***
>
> ***(2 கொரி. 4:17, 18)***

அநித்தியமானவைகள், நித்தியமானவைகள் என்று இரு வகையான காரியங்களைக் குறித்து பவுல் கூறுகிறார். நமது கண்களால் காணக்கூடியதும் உணரக் கூடியவைகளுமான இந்த உலகத்துக்கடுத்த காரியங்கள் அநித்தியமானவைகள். ஆனால் நித்தியமானவைகளை நம் கண்களால் காண முடியாது. அவைகள் காணக்கூடாத நித்தியமான உலகுக்கடுத்த காரியங்களாகும். ஒரு மிக

முக்கியமான காரியத்தை பவுல் கூறுகிறார். காணப்படுகிறவைகளையல்ல காணப்படாதவைகளை நாம் நோக்கியிருக்கும்போது லேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை நமக்கு அளிக்கிறது.

நம்மில் அநேகர் உபத்திரவங்களினூடாகக் கடந்து செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் கண்டிப்பாக அவ்வாறு செல்லத்தான் வேண்டும். இப்பொழுதோ அல்லது சில நாட்கள் கடந்து சென்ற பின்போ நாம் துன்பங்களையும் கஷ்டங்களையும் பாடுகளையும் சந்தித்துத்தான் ஆகவேண்டும். அவைகள் நமக்கு நித்தியமான ஒரு மகிமையைக் கொடுக்கும். ஆனால் அதற்கு ஒரு நிபந்தனை: காணப்படாத காரியங்களை தொடர்ந்து நாம் நோக்கிக் கொண்டிருக்க வேண்டும். நித்தியமான காரியங்களை விட்டு நமது கண்களை விலக்கி அநித்தியமான உலகக் காரியங்களை நோக்குவோமென்றால் நமது பாடுகள், தேவன் நம்மைக் குறித்து வைத்துள்ள திட்டமாகிய நித்திய கனமகிமையை நமக்குக் கொண்டுவராது.

நமக்குத் துன்பங்களும் பாடுகளும் வரும்போது அதற்கு நாம் சரியான முறையில் ஈடுகொடுக்க வேண்டும். பாடுகளும் துன்பங்களும் நமது நித்தியத்தின் மேலுள்ள பார்வையை வழிவிலகச் செய்ய அனுமதிக்கக் கூடாது. காணப்படாததும் நித்தியமுமான காரியங்களின்மேல் நமது கண்களைத் தொடர்ந்து பதித்திருக்க வேண்டும்.

கண்களால் காணக்கூடாத காரியங்களை நோக்குவது குறித்து பவுல் கூறும்போது உண்மைக்குப் புறம்பாகத் தோன்றுவது போன்ற ஒரு காரியத்தைக் கூறுகிறார். கண்களால் காணக்கூடாத காரியங்களை நீங்கள் எப்படிக் காண முடியும்? நமது உடலாலும் உணர்ச்சிகளாலும் நித்தியமான காரியங்களோடு நாம் தொடர்பு கொள்ள

முடியாது. ஆனால் நமது விசுவாசத்தின் மூலம் மாத்திரமே இது கூடும். அநித்தியமான காரியங்களை நமது புலன்களால் உணரமுடியும். நித்தியமான காரியங்களை நமது விசுவாசத்தால் தொடர்பு கொள்ள முடியும்.

*இதே நிரூபத்தில் பவுல், கிறிஸ்தவர்களாகிய நாம் "தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்" என்று கூறுகிறார். **(2 கொரி. 5:7).** நமது புலன்களால் உணரக்கூடிய இந்த அநித்தியமான காரியங்களால் எவ்விதத்திலும் பாதிக்கப்படப்போவதில்லை. மாறாக நாம் விசுவாசத்தோடு நடக்கிறோம். கண்களால் காணக்கூடாத நித்தியமான காரியங்கள் நம்மை நடத்திச் செல்கிறது, நம்மை ஆள்கிறது, நம்மை ஊக்குவிக்கிறது.*

***2** கொரி. **13:18**ல் மற்றுமொரு முக்கியமான காரியத்தை பவுல் நமக்கு வெளிப்படுத்திக் கூறுகிறார்: தேவனுடைய வசனமாகிய முகம் பார்க்கும் கண்ணாடியின் மூலமாய் நித்தியத்திற்குரிய காரியங்கள் நமக்கு வெளிப்படுத்தப்படுகினறன. புதிய ஏற்பாட்டில் தேவனுடைய வார்த்தையை முகம்பார்க்கும் கண்ணாடிக்கு ஒப்பிட்டு அநேக இடங்களில் கூறப்பட்டுள்ளது. இந்தக் கண்ணாடியானது நமது உடலையோ நமது தன்மையையோ அல்லது நமது தோற்றத்தையோ காண்பிக்காது, காணப்படாததும் நித்தியமுமான ஆவிக்குரிய உலகத் தோற்றத்திற்கேற்ற நமது ஆவிக்குரிய தன்மையையே நமக்குக் காட்டுகின்றது.*

> ***18நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.***
> ***(2 கொரிந்தியர் 3:18)***

மீண்டும் இதே காரியம் வெளிப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. நாம் தேவனுடைய வசனமாகிய

கண்ணாடியின் மூலமாய் தேவன் நமக்கு ஆயத்தம் செய்துள்ள நித்தியமும் மகிமையுமான காரியத்தை காணும் போது மட்டுமே பரிசுத்த ஆவியானவர் அந்த மகிமைக்கேற்ற பிரகாரமாக நம்மை மறுரூபப்படுத்துவார். மகிமையின் காரியத்தை விட்டு நமது கண்களை விலக்கிக் கொள்ளும்போது பரிசுத்த ஆவியானவர் நம்மை மாற்றம் செய்யும் தமது கிரியையை செய்யமாட்டார். இதற்குக் காரணம் அநித்தியத்திற்கும் நித்தியத்திற்கும் கர்த்தராகிய இயேசுவே ஆண்டவராயிருக்கிறார். நாம் முக்கியப்படுத்திச் செய்யும் காரியங்கள் சரியாக இருக்குமென்றால் இவ்விரு நிலைகளிலுமே தேவன் நம்மை ஆசீர்வதிப்பார். நாம் முன்னிலைப்படுத்தும் காரியங்கள் தவறானவைகளாக இருப்பின் தேவனுடைய ஆசீர்வாதத்தை நாம் இழந்துவிடுவோம். பரிசுத்த ஆவியானவரும் நம்மில் கிரியை செய்ய மாட்டார்.

சரியான காரியங்களை முன்னிலைப்படுத்தி செயல்படுத்திய மனிதனுக்கு மோசேயை ஒரு உதாரணமாகக் கூறலாம். எபிரெயர் 11ஆம் அதிகாரத்தில் இதைக் குறித்து கூறப்படுவதை நாம் காணலாம்:

24விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து,

25அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு,

26இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்.

27விசுவாசத்தினாலே அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து, ராஜாவின்

கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தைவிட்டுப் போனான். (எபிரெயர் 11:24-27)

இங்கே கூறப்பட்டுள்ள "அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து'' என்ற சொற்றொடரைக் கவனியுங்கள். மோசே நித்தியமான தேவனை தரிசித்தார். நித்தியமான காரியங்களையும் நித்தியமான உண்மைகளையும் கண்டார். எப்படி மோசே இவற்றைக் காண முடிந்தது? அவருடைய உணர்வுகள் மூலமாக அல்ல. விசுவாசத்தின் மூலமாகக் கண்டார். விசுவாசத்தின் மூலமாக காணக்கூடாத நித்தியமான காரியங்களோடு அவர் தொடர்பு வைத்திருந்ததால் தன்னுடைய அழைப்பை விட்டு அவர் விலகிச் செல்லவில்லை. தன்னுடைய உணர்வுகளின் மதிப்பை இழந்துவிடவில்லை. நித்தியமான தேவனுடைய மகிமையின் காரியங்களைவிட எகிப்தின் ஆஸ்திகள் அவருக்குப் பெரியவைகளாகத் தோன்றவில்லை. தேவனுடைய நித்திய சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ள இவ்வுலகத்தின் ஆஸ்திகளை இழக்க ஆயத்தமாயிருந்தார். அவர் எதற்கு முக்கியத்துவம் கொடுத்தாரோ அது மிகச் சரியானதே. ஏனெனில் காணக்கூடாத மகிமையின் காரியங்களின் மேல் விசுவாசத்தோடு அவர் நோக்கமாயிருந்தார்.

நமது கலாச்சாரத்தையும் நாகரீகத்தையும் கொண்ட மக்களுக்கு இது குறித்து நான் ஒரு எச்சரிக்கையைக் கூற விரும்புகிறேன். ஐசுவரியத்தைத் தேடிப்போகாதீர்கள். சொத்துக்கள் உங்களது குறிக்கோளாக இருக்க வேண்டாம். ஐசுவரியத்தைத் தேடிப் போகும் மக்களைக் குறித்து பவுல் வேதனையோடு இவ்வாறு குறிப்பிடுகிறார்:

> ***9 ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்.***

[10]பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்.

[11]நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவ பக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு.

(1 தீமோ. 6:9-11)

ஐசுவரியத்தை நாடி தேடிச் செல்லாதீர்கள். நித்தியத்திற்குரிய நிலையான காரியங்களையும் மேலானவைகளையும் தேடிச் செல்லுங்கள். அநித்தியமான ஐசுவரியத்தை நாடி, அதன் மீது உங்கள் கண்களைப் பதித்து அதனையே உங்கள் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுவீர்களானால் நீங்கள் அதற்காக வருத்தப்படவேண்டிய சூழ்நிலை ஏற்படும். அநேக வேதனைகளால் உங்களை உருவக் குத்திக் கொள்ளுவீர்கள். நீங்கள் குழியில் விழுந்துவிடுவீர்கள். மேலும் அறிவீனமான தீமை பயக்கும் ஆசைகளால் இழுக்கப்பட்டு அழிவுக்கு நேராய் செல்லுவீர்கள். உங்கள் இருதயம் ஐசுவரியத்தைத் தேடிச் செல்லுமானால் இந்த வார்த்தைகளுக்குச் செவிகொடுத்து சரியான பாதைக்குத் திரும்புங்கள்.

ஐசுவரியத்தைத் தேடுவதற்கு வேறு ஒரு வழி உள்ளது. அதற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். நாம் தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுவோமென்றால் நமது தேவைகளை அவர் சந்தித்து அளவுக்கதிகமான முறையில் நமக்கு தேவன் அருளிச் செய்வார். தேவன் கருமியல்ல. அவர் தாராளமான மனதுடையவர். நமது எண்ணங்கள் நேர்மையானவை என்று அவர் அறிந்து கொண்டால், தமது தயாளத்தை நமக்கு அவர் அளிப்பார். இயேசு இவ்வாறு கூறுகிறார்.

[31]ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள்.

[32]இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.

[33]முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். (மத்தேயு 6:31-33)

அநித்தியமான காரியங்களை நாடித் தேடுவதற்கும், நித்தியமான காரியங்களைத் தேடி, அதன் மூலமாய் தேவன் அநித்தியமான ஆசீர்வாதங்களை நமக்கு அவர் தருவதன் மூலம் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கும் நிரம்ப வித்தியாசம் உள்ளது. நாம் சரியான காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

10

தேவன் தேர்ந்தெடுக்க அனுமதித்தல்

தேவனுடைய சிறந்தவைகள் நமக்குத் தேவையென்றால் தேவன் தெர்ந்தெடுக்க அனுமதியுங்கள் என்பதுதான் நான் கடைசியாகக் கூறும் அறிவுரையாகும்.

யோவான் ஸ்நானகன் இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறும் ஒரு காரியம் என்னை மிகவும் கவர்ந்தது.

> ***27 யோவான் பிரதியுத்தரமாக: பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக்கொள்ள மாட்டான். (யோ. 3:27)***

மேசியாவாகிய அவர் உம்மைவிட அதிகமான சீஷர்களை உடையவராக இருக்கிறார் என்றும் இதனால் யோவான் ஸ்நானகன் மனமுடைந்து போவார் என்றும் எண்ணி இதைக்குறித்து யோவானுடைய சீஷர் அவரிடத்தில் கூறினார்கள். அதற்கு யோவான், அதனாலென்ன, “பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய அவன் ஒன்றையும் பெற்றுக் கொள்ள மாட்டான்” என்று கூறுகிறார். அநேக பிரசங்கிமார், சபைகள், இயக்கங்கள் ஆகியவை வேறு சிலர் அதிக சபை மக்களையோ, அதிகமான ஆத்துமாக்களையோ அல்லது ஊழிய விரிவாக்கத்தையோ பெறும்போது மிகவும் மனமுடைந்து போய்விடுகின்றனர்.

ஆனால், யோவானைப் போல, பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய அவன் ஒன்றையும் பெற்றுக் கொள்ள மாட்டான் என்று கூறும் அளவுக்கு மனநிலையை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

என்னுடைய ஊழியத்தில் ஒரு சமயம் இந்தப் பாடத்தை மிகவும் ஜாக்கிரதையாக கற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் உணர்ந்தேன். இதைத் தியானம் செய்யும்போது "ஆண்டவரே இது சரிதானா? அநேக மக்கள் அநேக காரியங்களைப் பெற்றுக் கொள்ளுவதை நான் காண்கிறேன். ஆனால் அவைகளெல்லாம் பரலோகத்திலிருந்து கொடுக்கப்பட்டதற்கான அறிகுறிகளை நான் காணவில்லையே என்று நான் கூறினேன்."

''பெற்றுக் கொள்ளுவதற்கும் அபகரித்துக் கொள்ளுவதற்கும் பெருத்த வித்தியாசம் உண்டு" என்று பரிசுத்த ஆவியானவர் என்னிடம் கூறினார். இது என் கண்களைத் திறந்தது! அநேக மக்கள், ஏன் கிறிஸ்தவர்களும் கூட தங்களால் கூடுமான வரை அநேக காரியங்களை அபகரித்துக் கொள்ளுவதில் மிகவும் கண்ணும் கருத்துமாக உள்ளனர். தன்னுடைய உடன் கிறிஸ்தவர்களிடமும், மற்ற மனிதர்களிடமும் இதனால் நியாயமற்ற வழிகளிலும் நேர்மையற்ற முறையிலும் நடந்து கொள்ளுகின்றனர். ''இது தான் அபகரித்தல். அபகரிப்பதன் மூலம் கிடைக்கும் பொருள் அதிக காலத்திற்கு இராது, என்று தேவன் என்னிடம் கூறினார்."

பரலோகத்திலிருந்து கொடுக்கப்பட்ட காரியம் மட்டுமே கடைசி வரை நிலைத்திருக்கும். கடைசி வரை உங்களால் வைத்திருக்க முடியாத பொருளுக்காக ஏன் அதிக உடல் உழைப்பையும், கஷ்டத்தையும் அனுபவித்து அதனை அபகரிக்க வேண்டும்? ஓய்வாக இருந்து தேவனை நோக்கி உங்கள் முகத்தைத் திருப்பி "தேவனே நீர் எதை எனக்கு

விரும்பிக் கொடுக்கப் போகிறீர்?" என்று ஏன் நாம் கேட்கக் கூடாது?

"பயப்படாதே சிறு மந்தையே உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" என்று இயேசு தமது சீஷரைப் பார்த்து கூறுகிறார் (லூக்கா ***12:32)*** *சகோதர சகோதரிகளே நமக்கு ராஜ்யம் சொந்தமாக இருக்குமென்றால் நாம் ஏன் அபகரிக்க வேண்டும்? நமக்கு ஏன் இராஜ்யம் கிடைக்கவில்லை என்றால் நாம் அதை அபகரிக்க எண்ணுகிறோம். தேவன் மகிழ்ச்சியோடு நமக்கு இராஜ்யத்தைக் கொடுக்க விரும்புவதால் அதனை நாம் பெற்றுக்கொள்ளுகிறோம். நாம் அபகரிப்பதை விட்டுவிட்டு அமைதியாக இருந்து தேவன் நமக்குக் கொடுப்பதை பெற்றுக்கொள்ள ஆவலுள்ளவர்களாக இருக்க வேண்டும். அநேக முறை நாம் அபகரிக்க விழையும்போதும் அபகரிக்க வேண்டும் என்று ஆவலோடு இருக்கும் போதும் தேவன் நமக்கு விருப்பத்தோடு கொடுப்பதைப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை.*

இஸ்ரவேல் நாட்டில் அநேக ஆண்டுகள் நான் இருந்தேன். அங்கு ஒரு சொல் வழக்கத்திலுள்ளது: ''எனக்கு இதில் உரிமையுள்ளது எனவே இது என்னுடையது" சாதாரணமாக நாம் இவ்வாறு நினைப்பது சரியாக இருந்தாலும் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து இவ்வாறு நாம் சிந்திக்கலாகாது. தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துச் சிந்திக்கும்பொழுது "என் பிதாவாகிய தேவனே நீர் எனக்கு எதை விரும்பித் தரப்போகிறீர்?" என்று நாம் கேட்க வேண்டும். இது தான் நாம் செய்ய வேண்டிய காரியம். இதுவே நிலையானது.

சங்கீதம் ***47****இல் தேவன் தமது பிள்ளைகளாகிய இஸ்ரவேல் மக்களைப் பார்த்து இவ்வாறு கூறுகிறார்:*

2 உன்னதமானவராகிய கர்த்தர் பயங்கரமானவரும், பூமியின் மீதெங்கும் மகத்துவமான ராஜாவுமாயிருக்கிறார்.

***3*ஜனங்களை நமக்கு வசப்படுத்தி, ஜாதிகளை நம்முடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்துவார்.**

***4*தமக்குப் பிரியமான யாக்கோபின் சிறப்பான தேசத்தை நமக்குச் சுதந்தரமாகத் தெரிந்தளிப்பார். (சங். 47:2-4)**

வெளியே சென்று நல்ல நிலத்தைப் பார்த்து அதை அபகரித்துக் கொள்ளுங்கள் என்று இஸ்ரவேல் மக்களைப் பார்த்து தேவன் சொல்லவில்லை. தாம் தெரிந்து கொண்ட நிலப்பகுதியை அவர்களுக்குக் கொடுப்பதாகத் தெரிந்தார். அந்த நிலத்தைக் குறித்துக் கூறும்போது "மகிமை" என்ற வார்த்தையை உபயோகிக்கிறார். வேதத்தின் பல்வேறு பகுதிகளில் இஸ்ரவேல் நாடு மற்றெல்லா நாடுகளையும் விட மிகவும் மகிமையில் சிறந்ததாகவும் அழகான, விரும்பத்தக்க நாடாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது. அவர்களாகத் தேர்ந்தெடுப்பதைவிட மிகவும் சிறந்த நாட்டை தேவன் அவர்களுக்காகத் தெரிந்து கொண்டு அவர்களுக்குக் கொடுத்தார். அதைச் சுதந்தரிப்பதற்காக அவர்களுக்காக தேவன் சண்டையிட்டு மற்ற நாடுகளை அவர்களுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினார்.

நாமாகச் சென்று அபகரித்தோமென்றால் தேவன் நமக்காகப் போராடமாட்டார். அப்படி அபகரிக்கச் சென்றோமென்றால் சண்டையிட நேரிடும். அதில் நாம் தோற்றுப்போவோம். அபகரிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் நமக்குச் சுதந்தரமாகக் கொடுப்பதற்காக தேவன் நமக்காக எல்லாவற்றையும் செய்வார்.

வேதத்தில் நாம் காணும் மற்றொரு முக்கியமான குறிப்பு என்னவென்றால் நமது சுதந்தரத்தில் தான் உண்மையான ஓய்வு உண்டு. யோர்தானுக்குக் கிழக்காக இஸ்ரவேல் மக்கள் இருக்கும்போது அவர்களைப் பார்த்து "உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கும் இளைப்பாறுதலிலும் சுதந்தரத்திலும் நீங்கள் இன்னும்

*பிரவேசிக்கவில்லையே" என்று கூறுகிறார். (உபா. **12:9**)*

தேவன் அவர்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுத்தார். அந்த சுதந்தரத்திற்குள் பிரவேசிக்கும்போது அவர்கள் ஓய்வு பெற்றுக்கொள்வதை கவனியுங்கள். ஏன் ஓய்வில்லாமல் அலைந்து திரியும் அநேக கிறிஸ்தவர்கள் இந்த உலகத்தில் இருக்கிறார்கள்? ஏனெனில் அவர்கள் இன்னும் சுதந்திரத்திற்குள்ளாகப் பிரவேசிக்கவில்லை. ஏன் அவர்கள் தங்கள் சுதந்திரத்திற்குள்ளாக பிரவேசிக்க முடியாமல் இருக்கிறார்கள்? ஏனெனில் தேவன் அதனை அவர்களுக்குக் கொடுக்க அவர்கள் அனுமதிப்பதில்லை. ஏன் தேவன் அதனை அவர்களுக்குக் கொடுக்க அவர்கள் அனுமதிப்பதில்லை? ஏனெனில் அதனைத் தாங்களாகவே அபகரித்துக் கொள்ள வேண்டுமென்று அவர்கள் நினைப்பதால் தான்.

*தேவன் நமக்குக் கொடுக்கும் காரியங்கள் குறித்து இன்னும் சில முக்கியமான குறிப்புகளைக் கூற விரும்புகிறேன். முதலாவதாக, இயேசு யோவான் **10:29**ல் மிகச் சிறந்த ஒரு காரியத்தைப் பற்றிக் கூறுகிறார்: "அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்." இது தமிழில் சிறந்த மொழி பெயர்ப்பாக உள்ளது. மூல மொழியாகிய கிரேக்க மொழியில் இதனை நான் படித்தபோது இந்த மொழிபெயர்ப்பு மிகவும் அருமையானதாக உள்ளதை நான் கண்டேன்.*

"அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்" இது மிகவும் பெருமூச்சு விடுமளவுக்கு ஒரு அற்புதமான கூற்று ஆகும். இந்த அண்ட சராசரத்தில் மிகவும் முக்கியமானதும், எதிர்க்க முடியாததும், முற்றிலும் உண்மையானதும், நிலையானதும், சவால் விட முடியாததும் மேற்கொள்ள முடியாததுமான ஒரு காரியத்தை பிதாவானவர் கொடுத்திருக்கிறார். அது

எல்லாவற்றிலும் பெரியது. நரகத்தின் பிசாசின் தீய ஆட்சியாளர்களின் எந்தவொரு சக்தியும் இதனை செயலிழக்கச் செய்யவோ மேற்கொள்ளவோ முடியாது.

பிதாவானவர் தனக்குக் கொடுத்ததைத் தவிர வேறு எதனையும் இயேசு விரும்பவில்லை. இது அவருடைய குணாதிசயம். பிதாவானவர் கொடுத்ததை உலகத்தில் எந்த ஒரு சக்தியாலும் இயேசுவிடமிருந்து எடுக்க முடியவில்லை. இது எவ்வளவு இயேசுவின் காரியத்தில் உண்மையோ அந்த அளவுக்கு உங்களுடைய விஷயத்திலும் என்னுடைய விஷயத்திலும் உண்மையே. உங்களுக்கும் எனக்கும் பிதாவானவர் கொடுத்திருப்பது எல்லாவற்றிலும் பெரியது. எதிர்ப்புகளைக் குறித்து மனம் சோர்ந்து போகாதீர்கள். நீங்கள் சோர்ந்து போவதே பிதாவானவர் உங்களுக்கு கொடுத்ததை எடுத்து பயன்படுத்தவில்லை என்பதற்கு சான்றாகும். பிதாவானவர் உங்களுக்குக் கொடுத்ததைப் பற்றி நன்கு உணருவீர்களென்றால் எதிர்ப்பைக் கண்டு புன்முருவல் செய்வீர்கள். இதற்கு முழு உத்தரவாதம் உண்டு. இந்த அண்ட சராசரத்தின் முக்கியமான நிகழ்ச்சியே பிதாவாகிய தேவன் எதைக் கொடுத்திருக்கிறார் என்பதேயாகும்.

மலைப்பிரசங்கத்தில் இவ்வாறு இயேசு கூறுகிறார். "சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்." (மத்தேயு 5:5) இதனைப் புரிந்து கொண்டீர்களா? பூமியை அவர்கள் அபகரிக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் அதைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள். அபகரிப்பவர்கள் புறம்பேத் தள்ளப்படுவார்கள். அபகரிப்பவர்கள், பேராசை பிடித்தவர்கள், அஜாக்கிரதையானவர்கள், இச்சிப்பவர்கள், வன்முறையாளர்கள், தீமை செய்பவர்கள் ஆகிய இவர்களுக்கெல்லாம் ஒரு முடிவு உண்டு. அவர்கள் நிர்மூலமாக்கப்படுவார்கள் என வேதம் கூறுகிறது. துன்மார்க்கனைத் தேடினாலும் காணமாட்டீர்கள்.

ஆனாலும் சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள். நமக்கு வேண்டிய சுதந்தரத்தை தேவனே கொடுக்கும்படியாக நாம் இடமளிக்கவும், தேவன் நமக்குக் கொடுப்பதே எல்லாவற்றிலும் சிறந்தது என்பதை நாம் புரிந்து கொள்வதும் மிகவும் முக்கியமான காரியமாகும்.

நான் ஒரு முறை கேள்விப்பட்ட மேற்கோள் ஒன்றைக் கூறி இந்த "தேவனுடைய சிறந்தவைகள் உங்களுக்குத் தேவையென்றால்" என்ற இந்தப் புத்தகத்தை நான் முடிக்க விரும்புகின்றேன்: "தேவனுடைய விருப்பத்திற்கு ஒப்புக் கொடுப்பவர்களுக்கு தேவன் தம்முடைய சிறந்ததைக் கொடுப்பார்." உங்கள் பரம தகப்பனுடைய விருப்பத்திற்கு ஒப்புக் கொடுப்பீர்களா?

தேவனுடைய சிறந்தவைகள் தேவையென்றால் நீங்கள் செய்ய வேண்டிய கீழ்க்கண்ட காரியங்களைப் பட்டியலிட்டு கூறுகிறேன்:

1. தேவனுடைய சிறந்தவைகளை ஆசியுங்கள். அதைவிடக் குறைவானதோடு நின்று விடாதீர்கள்.
2. இயேசுவை உங்கள் குறிக்கோளாகக் கொள்ளுங்கள்.
3. தேவனுடைய வார்த்தையைத் தியானியுங்கள்
4. பரிசுத்த ஆவியானவரோடு நட்புக் கொள்ளுங்கள்
5. தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படியுங்கள்
6. நீங்கள் எதைக் கேட்கிறீர்கள் எப்படிக் கேட்கிறீர்கள் என்பதைக் குறித்து கவனமாயிருங்கள்.
7. தற்காலிகமான காரியங்களைவிட நித்தியமான காரியங்களைக் குறித்து மிகவும் கரிசனையுள்ளவர்களாயிருங்கள். நீங்கள் முன்னுரிமையளிக்கும் காரியங்கள் சரியானதுதானா என்பது குறித்து நிச்சயமுள்ளவர்களாயிருங்கள்.
8. தேவன் தேர்ந்தெடுக்க அனுமதியுங்கள்.

ஆசிரியரைப்பற்றி. . .

டெரிக் பிரின்ஸ் இந்தியாவில் பெங்களூர் பட்டணத்தில் பிரிட்டிஷ் தம்பதியருக்குப் பிறந்தார். பிரிட்டனிலுள்ள பிரசித்தி பெற்ற கல்வி நிறுவனங்களான ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்து கிரேக்கம் மற்றும் இலத்தீன் மொழிகளில் புலமை பெற்றார். **1940** முதல் **1949** வரை கேம்பிரிட்ஜ்ஜில் உள்ள கிங்ஸ் கல்லூரியில் புராதன மற்றும் நவீன தத்துவம் என்ற துறையில் பேராசியராக இருந்தார். அராமியம் மற்றும் எபிரெய மொழியை கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் எருசலேமிலுள்ள எபிரெய பல்கலைக் கழகத்திலும் கற்றார். மேலும் இவர் உலகத்திலுள்ள பல நவீன மொழிகளைப் பேசும் ஆற்றல் உள்ளவர்.

இரண்டாம் உலகப் போரின் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் இராணுவத்தில் மருத்துவமனை ஊழியராகப் பணி புரிந்தபோது தன் வாழ்க்கையை மாற்றிய இயேசுவை நேருக்கு நேர் சந்திக்கும் அனுபவத்தைப் பெற்றார். அதைக் குறித்து அவர் பின்வருமாறு கூறுகிறார்:

> இந்த இயேசுவின் சந்திப்பினால், என்னில் ஆழமாக இரு கருத்துக்கள் பதிந்துவிட்டன: முதலாவது இயேசு ஜீவிக்கிறார் என்பது. இரண்டாவது வேதாகமம் என்றும் மாறாதது; எக்காலத்திற்கும் பொறுத்தமுள்ளது; தற்காலத்தில் நாம் பின்பற்ற வேண்டிய கருத்துக்களைக் கொண்ட நூல் என்பதாகும்.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் பிரிட்டிஷ் இராணுவம் இவரை எங்கு பணியில் வைத்திருந்ததோ அங்கேயே தொடர்ந்து தங்கியிருந்தார். அந்த இடம் எருசலேம் பட்டணமாகும். லிடியா என்பவரை மணந்ததன் மூலம் லிடியாவின் குழந்தைகள் இல்லத்தில் வாழ்ந்த எட்டு பிள்ளைகளுக்கு இவர் வளர்ப்புத் தந்தையானார். இவர்கள் குடும்பமாக 1948இல் இஸ்ரவேல் நாடு உருவாவதைக் கண்டு களித்தனர். கென்யாவில் கல்வியாளராகப் பணிபுரிந்தபோது லிடியாவும் பிரின்ஸும் ஆப்பிரிக்கப் பெண்குழந்தை ஒன்றை ஒன்பதாவது குழந்தையாகத் தத்தெடுத்தனர். 1975இல் லிடியாவின் மரணத்திற்குப் பின் 1978இல் பிரின்ஸ் மறுமணம் செய்தார். லிடியாவைப் போல் ரூத்தையும், அவர்கள் எருசலேம் பட்டணத்தில் ஆண்டவருடைய ஊழியம் செய்து கொண்டிருந்த போது சந்தித்தார். ரூத்தின் பிள்ளைகள் மூவருடன் அவர்களுடைய குடும்பத்தின் உறுப்பினர்கள் பன்னிரண்டு பேராயினர். மேலும், அவர்களுக்கு அநேகப் பேரப்பிள்ளைகளும், அவர்களுடைய பிள்ளைகளுமாக அவர்கள் குடும்பம் பெரியதானது.

இவரது சபைப் பாகுபாடற்ற நிலையினால் பலதரப்பட்ட இன, மத மக்கள் மத்தியிலும் இவர் பிரசங்கிக்க வழிவாசல் திறக்கப்பட்டது. நமது காலத்தில் சர்வதேச அளவில் சிறந்த வேத விற்பன்னராக அங்கீகரிக்கப்பட்டுள்ளார். இன்றைக்கு டெரிக் பிரின்ஸீடன் **(Today with Derek Prince)** என்ற தினந்தோறும் ஒலிபரப்பப்படும் வானொலி நிகழ்ச்சி உலகத்தின் பாதிக்கு மேல் உள்ள மக்கள் அரபி, ஐந்து சீன மொழிகள் (மண்டாரின், அமாய், கேன்டோனிஸ், ஷாங்கையீஸ், ஸ்வேடோ,) மங்கோலியன், ஸ்பேனிஷ், ரஷ்யன்,டோங்கன் ஆகிய மொழிகளில் கேட்கின்றனர். இவர் 50 புத்தகங்களுக்கு மேல் எழுதியுள்ளார், 500 ஒலி நாடாப் போதனைகளையும், 160 வீடியோ போதனைகளையும்

வழங்கியுள்ளார். இவை அறுபதிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

'உலகளாவிய தலைவர்களின் அமைப்பு' (Global Outreach Leaders Programme) *என்ற டெரிக் பிரின்ஸ் ஊழியங்களின் மூலமாக இவரது புத்தகங்களும் ஒலி நாடாக்களும் மூன்றாவது உலக நாடுகள் கிழக்கு ஐரோப்பா, ரஷ்யா ஆகிய நாடுகளிலுள்ள கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவசமாக அனுப்பிவைக்கப்படுகின்றன.* ***2003****ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் எருசலேம் பட்டணத்தில் வைத்து கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.*

டெரிக் பிரின்ஸ் ஊழியங்களின் தலைமையிடம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வட கரோலினா மாகாணத்திலுள்ள சார்லட் பட்டணத்தில் அமைந்துள்ளது. இதன் கிளை அலுவலகங்கள் ஆஸ்திரேலியா, கனடா, ஜெர்மனி, ஹாலந்து, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா, தென்னிந்தியா மற்றும் பிரிட்டனில் அமைந்துள்ளன.

OTHER TAMIL BOOKS BY DEREK PRINCE

1) தேவனின் மருந்து புட்டி	Rs. 25/-
2) உங்களில் உள்ள தூய ஆவியானவர்	Rs. 30/-
3) தெய்வீகப் பரிமாற்றம்	Rs. 15/-
4) சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு கடந்து வருதல்	Rs. 40/-
5) ஆசீர்வாதங்கள் அல்லது சாபங்கள்: நீ தெரிந்து கொள்ளலாம்	Rs. 85/-
6) வாழ்வளிக்கும் விசுவாசம்	Rs. 60/-
7) அவர்கள் பிசாசுகளைத் துரத்துவார்கள்	Rs. 90/-
8) ஆவிக்குரிய போராட்டம்	Rs. 35/-
9) ஞானஸ்நானத்தின் மூலம் அடக்கம்பண்ணப்படுதல்	Rs. 25/-
10) அனாதைகள், விதவைகள், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர்	Rs. 25/-
11) சுயமாய் வேதத்தைக் கற்பதற்கான பாடங்கள்	Rs. 45/-
12) பிசாசுகளைத் துரத்துவார்கள்	Rs. 20/-
13) நீதியான வாழ்க்கைக்கு அடித்தளங்கள்	Rs. 230/-
14) விட்டுக்கொடுத்தலின் கிருபை	Rs. 30/-
15) வாழ்வை மாற்றும் ஆவிக்குரிய ஆற்றல்	Rs.110/-
16) அறிக்கையிடுதலின் ஆற்றல்	Rs. 55/-
17) சோதிக்கப்படுதல்	Rs. 25/-

மற்றும் எங்களிடம் ஆங்கிலம், கன்னடம், தெலுங்கு, மலையாளம், குஜராத்தி, மராத்தி, ஒரியா, பஞ்சாபி, நேபாளி போன்ற புத்தகங்களும் உள்ளன. பட்டியலுக்கு தொடர்பு கொள்ளவும்:

Derek Prince Ministries - India
18/32, Mangammal Salai, Renga Nagar,
Trichy - 620 021. Tamil Nadu. S.India
Phone.No:00-91-431-2457181/2459464
E-mail:r_m_c@vsnl.com